சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்

# சங்கநாதம்

# SANGANATHAM

முகத்துவாராம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு





முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு
தேவஸ்தான பிரம்மோற்சவ சிறப்பிதழ்

**சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்**
Youth League For Sanathana Dharmic Perception
3 RIDGEWAY PLACE COLOMBO -03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநாதத்தின் ஸ்வரங்கள்



- ❖ ஆரியபட்டர் பால மந்திர்
- ❖ ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் இந்து சமயப் பாடசாலை
- ❖ ஸ்ரீ பத்மாவதி இந்து சமயப் பாடசாலை

**சங்கநாதத்தின் அடுத்த முழக்கத்தில் ....**

**இரு கட்சிகளில் தொங்கும் தொழிலாளர் காங்கிரஸ்**

**கதிர்காமத்தில் மீண்டும் இந்துக்கள் வசமான இராமகிருஷ்ண மடம்**

**சூரியன் F.M வானொலி தொடர்ந்தும் முதலிடத்தில் இருக்குமா ?**

**அடுத்த சங்கநாதம் .....**

# சங்கநாதம்

**முழக்கம் 23**

வணக்கம்

இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்யும் பெரியோர்கள் பலர் இன்று உலகெங்கும் ஆன்மீகப் பயணம் செய்து வருகின்றார்கள். இன்று இளைய தலைமுறையினர் அனைவரும் நமது மதத்தில் அறிவுபூர்வமான ஆர்வம் கொண்டு தொண்டு மனப்பான்மையுடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக திகழ்பவர்கள், ஆரியபட்டர் பாலமந்திர் ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் இந்து சமயபாடசாலை மற்றும் ஸ்ரீ பத்மாவதி இந்து சமய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்.

கல்வி, மருத்துவம், கலைகள் என பல துறைகளில் இவர்கள் தங்களுடைய ஆர்வத்தை வெளிக்காட்டி வருகின்றனர்.

திருமதி செல்வம் கல்யாணசுந்தரம் அன்னையால் ஆரம்பிக்கப்பட்ட சங்கநாதம் சஞ்சிகை, அவர்களின் மறைவுககு பின்னால் சில காலம் வெளி வராமல் இருந்து தற்போது மீண்டும் உங்கள் கைகளில் தவழ இருக்கிறன. ஆன்மீகம், அரசியல், தமிழ், சிறுவர்களுக்கு சிந்தனையூட்டும் விடயங்கள், ஆரோக்கியம் என பல அம்சங்கள் உள்ளடங்கிய தமிழ் ஆங்கிலம் என இரு மொழிகளிலும் வெளிவருகிறது.

சங்கநாதத்தின் பணி சிறக்க உங்கள் ஆதரவை வேண்டி நிறகின்றோம்.

**வியாஸா கல்யாணசுந்தரம்**
**இல. 3, றிஜ்வே பிளேஸ்**
**கொழும்பு - 04.**
**தொலை: 2554759**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்துவார சங்கமத்தில் ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு

இயற்கை எழில் மிகு இலங்கா புரியில், கங்கையும் கடலும், சங்கமிக்கும் கொழும்பு முகத்துவாரத்தில் ஈசானிய மூலையில் வடகிழக்கு கோயில் வீதியில் கம்பீரமாக வீற்றிருக்கும் திருப்பதி வெங்கடேஸ்வர மகா விஷ்ணு திருக்கோயில், அருள்மிகு பத்மாவதித்தாயார் திருக்கோயில் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில், இலங்கையில் முதன் முதலாக அமைந்திருக்கும் எட்டு லக்ஷ்மிகளும் சேர்ந்து காட்சியளிக்கும் அருள்மிகு அஸ்டலக்ஷ்மி திருக்கோயில் ஏறக்குறைய 30,000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ளது.

இம்மூர்த்திகளின் திருக்கோயில்கள் இந்த 21ம் நூற்றாண்டின் போற்றுதலுக்குரிய அரிய பணிகளாகும். முப்பத்து நான்கு மூலவர்களும், பத்து உற்சவமூர்த்திகளும், நான்கு வனப்புமிகு வாகனங்களும் சேர்ந்து தரிசனம் தருவது கண்கொள்ளாக் காட்சி ஆகும். ஒரு கோயிலுக்கு இப்படி ஈசானிய திசையில் கடல் அமைவது மிக அபூர்வம் மட்டுமல்ல விஷ்ணு பள்ளி கொள்ளும் இடம் கடல் என்பதனாலும் அதிஷ்டமானதும் என்பது சமயச் சான்றோர்களின் ஏகோபித்த தீர்ப்பாகும்.

இக்கோயில் ஆனது ஆகம முறைப்படி கட்டப்பட்ட கோயில் ஆகும். இங்கு வைக்கப்பட்டிருக்கும் சிலைகள், வாகனங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது. □ஒவ்வொரு சிலைகளும் 9 முச 10 அடி உயரங்களில் அமைக்கப்பட்டுள்ளதுடன் இந்திய முறைப்படியே இங்கு கொடிமரம் வெளியில் தான் கட்டப்பட்டுள்ளது. இது ஏன் அமைக்கப்பட்டுள்ளது என்றால் இலங்கையில் ஒரு விஷ்ணு கோவிலை நிர்மாணிக்க வேண்டும் என நினைத்து துரைச்சாமி செட்டியாரும்(J.P) K.T.M. கருப்பையாபிள்ளை அவர்களுடைய முயற்சியால் நிர்மாணிக்கப்பட்டது. ஏன் எனில் இலங்கையில் விஷ்ணு பக்தர்கள் அதிகமாக இருக்கின்றர் ஆனால் விஷ்ணு ஆலயங்கள் அரிதாக உள்ளன என்பதால்.

இவ்வாலயமானது மூன்று பிரிவாக பிரித்தும் அமைக்கப்பட்டுள்ளது. முதல் பிரிவில் முத்துமாரி அம்மன், நடுவில், லக்குமி கணபதி, சித்தி புத்தி கணபதி, பாலமுருகன் போன்ற தெய்வங்களுடன் கூடிய கோவிலாகவும் நவக்கிரகம், சனீஸ்வரனுக்கு தனிப்பிரகாரமும், அத்துடன் பெரிய பிள்ளையாருக்கு நேராக ஆதி விநாயகரும் அமைக்கப்பட்டு எல்லாம் சேர்ந்து ஒரு கோவிலாகவும் இதற்குக் கொடியேற்றத்துடன் வருட உற்சவமும் சிறப்பாக நடைபெறும். அடுத்து அஷ்டலக்குமி கோவில். இங்கு 8 லக்குமி உள்ளது அதாவது ஆதிலக்குமி, சந்தானலக்குமி, கஜலக்குமி, தனலக்குமி, தானியலக்குமி, வீரலக்குமி, ஐஸ்வர்ய லக்குமி உள்ளன. இங்கு லக்குமிக்கு எழுந்தருளி இருக்கும் விக்கரகம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அம்மன்? பிள்ளையார் முருகன் போன்ற எழுந்தருளி விக்கிரகங்களும் அங்கு வைக்கப்பட்டுள்ளன. அடுத்து மகாவிஷ்ணுவிற்கு ஆலயம் உண்டு. வெங்கடேஸ்வர மகாவிஷ்ணுவும், பத்மாவதி தாயாரும் ஆண்டாளுடைய விக்கிரகமும் அமைக்கப்பட்டுள்ளன. அதன் சுற்றுப் புறத்தில் தாதாத்திரேயர், ஸ்ரீ சக்கரமும், நரசிம்மன், தன்வந்திரி, ஆஞ்சநேயர், பெருமாள் பாதம் கொடிமரம், சன்டேஸ்வரர், தட்சணாமூர்த்தி, போன்றன அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு 5 கால பூஜைகள் நடைபெறுகின்றன. அதாவது காலை 5.45 ற்கு திருப்பள்ளி எழுச்சி 6.15ற்கு பிள்ளையார் தொடக்கம் அனைத்து தெய்வத்திற்கும் பூஜை. அடுத்து நன்பகல் 12.30ற்கு, மாலை 5மணிக்கு அடுத்து இரவு 8.00 மணிக்கு மூலஸ்தான பூஜை பள்ளியறைபூஜையுடன் கோவில் மூடப்படுவதுடன் அர்ச்சனைகளும் விசேட தினங்களும் சைவசமய கோவில்கள் போன்றே நடைபெறுவதுடன் அங்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படுகிறது.

தொகுப்பு

**A.** காயத்திரி
**ABM**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கநாதம் சந்திக்கும் இம்மாத பிரபலம்

*தொழில் அதிபர் கெ. துரைசாமி செட்டியார்*

வாழ்தல் என்பது ஒரு கலை. அதை இரசித்து உணர்ந்து அனுபவிக்க வேண்டிய முழுமையான பொறுப்பு மனிதனையே சாரும். வாழ்க்கையில் மனிதன் காணும் ஏற்றத்தாழ்வுகள் வெற்றி தோல்விகள் எப்பொழுதும் மனதினுள் ஒரு கேள்வியை உருவாக்கும். வெற்றியை விட தோல்விகள், துன்பங்கள் தான் மனதில் அதிகம் படிந்து காணப்படும். இவை ஏன் நமக்கு ஏற்பட்டது என்ற கேள்வி மனதில் எழுவது வழக்கம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அனுபவசாலிகளின் வாழ்க்கை ஒரு பாடமாகவும் ஒரு ஏணியாகவும் அமையும். அதனால் வாழ்க்கையில் வெற்றிகள் பலகண்ட சமுதாயத்தில் பல சேவைகளை ஆற்றிக்கொண்டிருக்கும் ஓர் மனிதரை சங்கநாதம் சந்திப்பதில் பெருமை கொள்கிறது.

இலங்கையில் வர்த்தக துறையில் ஜாம்பவானாக திகழ்ந்து கொண்டிருக்கும் றஞ்சனாஸ் (பிறைவேற் லிமிரெட்) கூட்டு நிறுவனங்களின் அதிபர் கெ. துரைசாமி செட்டியார் அவர்களை அவரது இல்லத்தில் மதியவேளையில் ஒரு நாள் சந்தித்த அனுபவம் புதுமையானது. அவரோடு இருந்த அந்த 40 நிமிடங்களில் அவர் கூறிய கருத்துக்களை தொகுப்பதென்றால் அது ஒரு நூலாகும். வெற்றிக்கு அவர் கூறும் கருத்துக்கள் யதார்த்தமானவையும் எளிமையானவையுமாகும்.

கேள்வி: 1) ஊழியர்கள் நலனில் ஏன் தனிப்பட்ட கவனம் எடுக்கிறீர்கள்?

வறுமையின் கொடுமையினை உணர்ந்திருக்கின்றேன். ஊழியர்கள் தங்களையே அர்ப்பணித்திருக்கிறார்கள். றஞ்சனாஸ் கூட்டு நிறுவனங்களில் உள்ள ஊழியர்கள் விசுவாசத்துடன் ஒரு கூட்டு குடும்பமாக இருக்கும்போது அவர்கள் ஒவ்வொருவருடைய இன்ப துன்பங்களில் பங்கெடுப்பதுதான் தருமம். ஐவுளி கடைகளில் வேலை பார்ப்பவர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். இதனால் அவர்கள் உணவு உடையுடன் தினந்தோறும் எண்ணெய் தேய்த்து தலைவாரி கம்பீரமாக சந்தோஷமாக இருந்தால் தான் வர்த்தகம் செழிக்கும். அத்துடன் ஊழியர்களது தேவைக்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. தேவையான நேரத்தில் தேவையானவற்றை வழங்குகின்றோம். அவர்களும் எம்முடனேயே தொடர்ந்து இருக்கிறார்கள். அவர்களுடைய சேவைக்கு ஏற்றாற்போல மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும்.

He expects his workers to be smart, well disciplined and dedicated with sincerity.

கேள்வி: 2.) முகாமையாளர்கள் தனித்து இயங்கக் கூடிய ஆற்றல் இருந்தும் ஏன் உங்கள் நிறுவனத்தில் தொடர்ந்து பணியாற்றுகின்றார்கள்?

எங்கள் முகாமையாளர்களுக்கு நிறைய சொத்து உண்டு. தனித்து இயங்கலாம். ஆனால் கோடிக்கணக்கான சொத்தை அவர்களிடம் நாங்கள் நம்பிக் கொடுத்திருக்கின்றோமே. அவர்களும் பங்காளிகளாகவே இருக்கின்றார்கள். முதலாளி, முகாமையாளர் என்ற வேறுபாடு நம்மிடையே கிடையாது. ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து முகாமையாளர்களை சந்திக்கும் போது வருமானத்தை எவ்வாறு அதிகரிக்கலாம், ஊழியர்களது நலன்பற்றி எல்லாம் சிந்திப்போம். அதில் யாருடைய கருத்து ஏற்புடையதோ அதை நாம் ஏற்போம். இன்று இருக்கும் அத்தனை நிறுவனங்களும் றஞ்சனாஸ் பெயரில் இருப்பதென்றால் அதற்கு முகாமையாளர்களின் முயற்சியும் வேண்டுகோளுமே காரணம். எப்பொழுது "நான் முதலாலி நான் சொன்னதை நீங்கள் கேட்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோமோ" அன்றே பிரிவு ஏற்படும். அது வர்த்தகத்தைப் பாதிக்கும். இலாபம் பகிரப்படுகின்றது எனவே அவர்கள் தொடர்ந்தும் இருக்கின்றார்கள். முழு நேரத்தையும் வியாபாரத்திற்காகவே அர்ப்பணித்து உள்ளார்கள். 1983இல் எல்லாவற்றையும் இழந்தோம். இன்று இந்த நிலைக்கு வருவதென்றால் எல்லாமே அவர்களலால் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி: 4.) இந்தியா, இலங்கை வர்த்தகர்கள் பற்றிய உங்கள் அபிப்பிராயம்?

பாருங்க, இலங்கையில் வியாபாரம் செய்வது மிக சுலபம். ஒரு ஒழுங்கு முறை இருக்கிறது. கோடிக்கணக்கிலே பணப்பரிமாற்றம் செய்வாங்க, ஆனால் எண்ண மாட்டார்கள். கடனாளிகள் கூட காசு கிடைத்தால் உடனே கொடுத்திடுவாங்க. ஏமாற்றி வீழ்த்தவேண்டும் என்று நினைக்க மாட்டார்கள். ஆனால் இந்தியாவில் ரூபா 10,000/- கொடுத்தால் 3 முறை எண்ணுவாங்க. ஏமாற்ற பயப்படமாட்டாங்க. கொடுக்கல் வாங்கலுக்கு நல்ல ஊர் இலங்கை தான்.

கேள்வி: 5.) இனப்பிரச்சனை பற்றி உங்கள் கருத்து?

சமாதானமாக போகணும். என்னுடைய கருத்து அரசியல் தாக்கத்தையோ மாற்றத்தையோ ஏற்படுத்த மாட்டாது. அதை விட்டிடுங்க.

கேள்வி: 6.) கோடிக்கணக்கான வருமானம் கிடைக்குமாக இருந்தாலும் உங்களுடைய மனைவி வேண்டாம் என்றால் ஏன் செய்யாமல் விடுகின்றீர்கள்?

என்ன என்று எனக்கே தெரியாதுங்க. அவங்க அவ்வளவு படிக்கவில்லை. ஆனாலும் அவங்ககிட்ட ஒரு அபூர்வ சக்தி இருந்ததுங்க. அவங்க வேண்டானு சொல்லி நான் பண்ணிணா அது சரி வராதுங்க. அவங்க எது பண்ணிணாலும் அருமையாக இருந்தது. அவங்க தான் மூன்று மருமகளையும் தேர்ந்தெடுத்தாங்க. இன்றைக்கு விஷ்ணு கோயில் இந்த நிலைக்கு இருப்பதற்கு அவங்க தான் மூல காரணம். சிலை அமைக்கிறதில இருந்து எல்லாமே நுணுக்கமா பார்ப்பாங்க. என்னுடைய வாழ்க்கையில் இந்த நிலைக்கு நான் இருப்பதற்கு காரணம் அவங்க தான். ஆனால் இன்று அதன் விளைவுகளை பார்க்க அவங்க இல்லையே எனும் போது மனதுக்கு றொம்ப கஷ்ரமாக இருக்கு. அது மட்டும் இல்லைங்க எங்க குடும்பம் உங்க குடும்பம் என்று பார்த்ததே கிடையாது. எல்லாமே நம்ம குடும்பமென்று வரும் உறவினர்கள், நண்பர்களை கவனித்தார்கள். அவங்க எப்பவும் சொல்லுவாங்க எல்லாப் பிள்ளைகளும் ஒரே வீட்டில் இருக்கவேணும்னு. கூட்டு குடும்பம் மிக முக்கியம் அவங்களுக்கு

கேள்வி: 7.) குடும்பம், தொழில் இவை இரண்டையும் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?

என் மனைவி சொல்ற ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. அவங்க எப்பவும் business விசயங்களை வீட்டிற்கு கொண்டு வராதீங்க என்று சொல்லுவாங்க. குடும்பம் வேற தொழில் வேற. இதில அவங்க கொஞ்சம் strong கா இருந்தாங்க.

கேள்வி: 8.) ஆலய தர்ம கர்த்தாக்கள பற்றிய உங்கள் கருத்து?

இரு வகையான தர்ம கர்தாக்கள் :-

1.) பிழைப்புக்காக கோயில் நடத்துபவங்க. அவர்கள் வியாபாரிகள்.
2.) சமுதாயம், மதம் இவற்றின் வளர்ச்சிக்காக ஒழுங்காக கோயில் நடக்கவேண்டும் என்று நினைக்கும் தர்ம கர்த்தாக்கள்.

கேள்வி: 9.) அந்தணர்கள் பற்றிய உங்கள் கருத்து?

அந்தணர்கள் வழிபாட்டிற்கு உரியவர்கள். பிராமணன் என்றாலே அதன் அர்த்தம் எந்நேரமும் பிரம்மத்தை அல்லது கடவுளை சிந்திப்பவர் அல்லது இறைவன் நாமத்தை உச்சரித்துக்கொண்டே இருப்பவர் என்று. ஆனால் இலங்கையில் பிராமணர்கள் பற்றி பலர் குறை சொல்கின்றார்கள். முறையாக வேதம் கற்காமல் ஆலயங்களில் பூஜை செய்கின்றார்கள். முதலில் அவர்கள் தங்களது குல தர்மத்தை ஒழுங்காக கடைப்பிடிக்க வேண்டும். ஒழுங்காக கற்க வேண்டும். ஆலயங்களின் அளவுக்கு அந்தணர்கள் இல்லாதது பெரும் குறை. இது எதிர்காலத்தில் பெரும் பிரச்சனையாக மாறும். அந்தணர்கள் ஒழுங்காக தமது கடமைகளை செய்யாமையினால் அடியார்கள் குறை கூறுகின்றார்கள். அந்தணர்கள் தமக்கு வழங்கப்பட்ட இந்த உயரிய நிலையை அவமதிக்கக்கூடாது. இது ஏனைய துறைகளை போல் அல்ல. அந்தணர்கள் தங்களை மாற்றி அத்தனை தர்மத்திற்கும் அடியார்களுக்கும் முன் உதாரணமாக திகழ வேண்டும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்களில் 50%ந்தும் குறைவானவர்களே முன் உதாரணமாக இருக்கிறார்கள

கேள்வி: 10. உங்கள் மருமக்களை பற்றி: மூன்று மருமகள்மாரிலும் யாரை ரொம்ப பிடிக்கும் என்று கேட்க முடியாது. ஆனால் ஒவ்வொருவரிலும் நீங்கள் பார்த்த சிறப்புக் குணம்.?

மூவருமே நற்பண்பும், ஆற்றலும், உதவி புரியும் மனப்பாங்கும் மிக்கவர்கள். சில சமயங்களில் சில விடயங்களுக்கு என்னுடைய மூத்த மருமகளுடன் கலந்து ஆலோசிப்பது உண்டு.



திரு.திருமதி. துரைசாமி செட்டியார்

நேர்காணல்....
எஸ்.மயூரன்
வி.தமயந்தி
வி.காந்தீபன்

**BIO – DATA**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. டி. துரைசாமி செட்டியா |
| பிறப்பு | : | நுவரெலியா |
| பிறந்த திகதி | : | September 3rd |
| பிள்ளைகள் | : | 5 |
| விரும்புவது | : | திருமதி. பத்மாவதி துரைசாமி |
| விரும்பும் பெரியார் | : | ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச சுவாமிகள் |
| தொழில் அதிபர் | : | லக்மி டெக்ஸ்டைல்ஸ் - 1968 |
| | | ரஞ்சனாஸ் டெக்ஸ்டைல்ஸ் 1974 |
| | | ராம் பிரதர்ஸ் 1977 |
| | | லலிதா 1979 |
| | | டியூரோ பைப் இன்டஸ்ரீஸ் 1980 |
| | | (pvt) வரையறுக்கப்பட்டது |
| | | கோல்டன் செரமிக் |
| | | நவீன் செரமிக்ஸ் |
| அறங்காவலர் | : | ஸ்ரீ வெங்கடேஷ்வரா மகா விஷ்ணு தேவஸ்தானம் கொழும்பு – 15. |

Ganesh Textiles

துரைசாமி செட்டியார் ஐயா அவர்களின் வீட்டிற்கு இரு முறை சென்றிருந்தோம். இரு விடயங்கள் மனதை நெகிழ வைத்தன.

தினந்தோறும் காலை அலுவலகத்திற்கு புறப்படுமுன் குடும்ப அங்கத்தினர் ஒன்று சேர்ந்து பூஜை செய்து மகன்மார், மருமகள்மார், பேரப்பிள்ளைகள் யாவரும் செட்டியா அவர்களது காலிலும், அதே வேளை சாந்தமான, குழந்தை தனமான புன்முருவல் பூத்துக்கொண்டிருக்கும் அவர்களது தாயார் திருமதி பதமாவதி அவர்களுடைய படத்திற்கு முன்னால் வீழுந்து வணங்குகின்றார்கள். அத்தோடு இரவு வேளைகளில் 8.30க்கு என்ன அவசர கடமைகள் இருந்தாலும் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து இரவு ஆகாரம் உட்கொள்வார்கள். இந்த இரு விடயங்களும் மகிழ்ச்சியான குடும்பத்திற்கு மிக அவசியம். இதை இந்துமதம் வலியுறுத்துகின்றது.

வாசகர்களே, "நீங்களும் இந்த இரு வீடயங்களை கைகொள்ளலாம் தானே "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் விநாயகர் வழிபாடு

முதன்மை கடவுளான விநாயகர் பிறந்த நாள்தான் விநாயகா சதுர்த்தி. ஒவ்வொரு ஆண்டும் ஆவணிமாதம் வளர்பிறை சதுர்த்தி நாளைத்தான்நாம் விநாயகர் சதுர்த்தியாக கொண்டாடுகின்றோம். இந்த ஆண்டு அவ்விழா இம்மாதம் 18ந் தேதி (ஆவணி 2ந் தேதி) வருகின்றது.

பொதுவாக எந்த ஒரு காரியத்தையும் தொடங்கும் முன்பு நாம் விநாயகரை வணங்குகிறோம். அப்படி இருக்கையில் விநாயகர் சதுர்த்தி நாளில் நாம் அவரை வழிபட்டால் எத்தனை பெரிய நன்மைகளை பெறலாம். பொதுவாக பிள்ளையாரை நம்வசதிக்கு தகுந்தபடி வணங்கலாம். எளிமையாக காட்சி தருபவர். ஒரு ஏழை எளியவன் சாணத்தை பிடித்து வைத்தோ மஞ்சளை பிடித்து வைத்தோ பிள்ளையாராக நினைத்து வணங்கினால் அவரின் அருள் கிடைக்கும்.



பிள்ளையார் சதுர்த்தி அன்று அவரை நியதிபடி வணங்கினால் அவரின் அருள் பூரணமாக கிடைக்கும். அன்று வீட்டில் விநாயகரை எப்படி வழிபட வேண்டும் என்பதை காண்போம்.

விநாயகர் பூஜை நடத்த விரும்புபவர்கள் முன்தினமே அதற்கு ஆயத்தமாக வேண்டும். வீட்டை சுத்தம் செய்து வைக்க வேண்டும். குறிப்பாக பூஜை நடத்த வேண்டிய அறையை மிக தூய்மையாக வைப்பது நன்று. இந்த ஆண்டு பிள்ளையார் சதுர்த்தி சனிக்கிழமை வருகிறது, எனவே வெள்ளிக்கிழமையே நாம் வீட்டை கழுவி சுத்தம் செய்து விட வேண்டும். அதே போல் அனறே பூஜைக்கு வேண்டிய பொருட்களையும் வாங்கி வைத்து விட வேண்டும்.வழிபாட்டிற்கு மண்ணினால் செய்து விநாயகரையே பயன்படுத்துவது நல்லது. வெள்ளிக்கிழமை மாலை 6-31 மணிக்கு பிறகு சதுர்த்தி திதி ஆரம்பிக்கின்றது. அதன்பின் அருகில் உள்ள கோவிலுக்கு சென்று வணங்கிவிட்டு பிள்ளையாரை வாங்கி வந்து பூஜை அறையில் வைத்துவிடலாம். அப்போதே பூஜை சாமான்களையும் வாங்கலாம்.

சனிக்கிழமை அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு பூஜைக்கு தயாராக வேண்டும். பூஜை அறையில் மரப்பலகையில் பிள்ளையாருக்கு ஆசனம் அமைக்க வேண்டும். அதில் பச்சரிசி மாவினால் கோலம் போட வேண்டும். அக்கோலம் புள்ளி இல்லாத கோலமாக இருக்க வேண்டும். அதன் மீது பிள்ளையாரை வைக்க வேண்டும். அதன் முன்பு தலைவாழை இலையை போடவேண்டும். இலையின் நுனிபகுதி நமக்கு வலது கை பக்கம் வரும் வகையில் அமைக்க வேண்டும். இலையில் 3 கைபிடி அளவு பச்சரிசியை பரப்ப வேண்டும். அதில் உ என்ற எழுத்தை வரைந்து அதன் கீழ் ஓம் என்று எழுத வேண்டும்.

பிள்ளையாருக்கு அறுகம் புல் மாலை எருக்கம் பூ மாலை 6 புரி கொண்டு பூணூல் அணிவிக்க வேண்டும். மேலும் விபூதி, குங்குமம் வைக்க வேண்டும் பிள்ளையாரின் நாபியில் (தொப்புளில்) ஒரு ரூபாய் நாணயத்தை வைக்க வேண்டும். வசதி படைத்தவர்கள் தங்க நாணயத்தையும் வைக்கலாம்.

பின்னர் பிள்ளையாருக்கு பிடித்தமான நைவேத்தியத்தை படைத்து பூஜையை நடத்தலாம். மேதகம் கொழுக்கட்டை, அவல், பொரி, சர்க்கரை பொங்கல் பிள்ளையாருக்கு மிகவும் பிடித்தமானவை. இவை பூஜையில் இடம் பெறுவது நல்லது. மேலும் பழ வகைகளையும் வைத்து வணங்கலாம்.

**சங்கநாதம்**
**முழக்கம் 23**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைக்கும் நாள்

பிள்ளையார் சதுர்த்தி முடிந்த 1,3,5,7,9.... என ஒற்றைப் படை நாளில் தான் பிள்ளையாரை கரைக்க வேண்டும். கரைக்கும் நாள் ஞாயிறு அல்லது திங்கட் கிழமையாக இருப்பது நல்லது. இந்த ஆண்டு திங்கட்கிழமை கரைப்பது நல்லது. வீட்டில் இருக்கும் ஒவ்வொரு நாளும் விநாயகருக்கு நாம் எளிமையாக பூஜை நடத்த வேண்டும். குறைந்த பட்சம் கற்கண்டு வைத்து தீப ஆராதனையாவது செய்யலாம்.அதற்கு முடியாதவர்கள் பிள்ளையார் சதுர்த்தி அன்றே சிலையை கரைக்கலாம்.அதில் தவறு இல்லை. பிள்ளையாரை கரைக்க கடல், ஆறு, குளம், கிணறு போன்ற நீர்நிலைகளை பயன்படுத்தலாம். கரைப்பதற்கு முன்னால் பிள்ளையாருக்கு அணிவித்த பூணூல் நாபியில் வைத்த நாணயத்தை எடுத்து விட வேண்டும். கரைக்கும் போது "மங்கள மூர்த்தி விநாயகா அடுத்த வருடம் வா ராஜா" என்று சொல்லி கரைக்க வேண்டும்.

பிள்ளையாரின் நாபியில் வைத்த நாணயம் புனிதமானது. அதை பூஜை அறையில் வைத்து வணங்கி வந்தால் லட்சுமி அருள் கிடைக்கும்.

ஆரியப்பட்டர் பால மந்திர் பாடசாலை

அதிபர்

செல்வி. தமயந்தி வேலாயுதம்

ஆசிரியர்கள்

-----------

செல்வி. கனகராஜா சியாமா

செல்வி. காயத்திரி ஆனந்தராஜா

செல்வி. லலிதா லக்ஷ்மி மாடசாமி

செல்வி. ஆர்த்தி சோமலிங்ககுமார்

செல்வி. பத்மபிரியா கனகசபை

செல்வி. சியாமளா ஆனந்தரவி

செல்வி. சோபியா சிவகுமாரன்

திரு. தில்லைநாதன் ஆனந்தரவி

திருமதி. மகேஸ்வரி சிவகுமாரன்

ஆரோக்கிய சொற்பொழிவு – பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்தில்

**Dr**. காயத்திரி பெரியசாமி **MD(USA)**

நீரிழிவும் பாதுகாப்பும் பற்றி 25ம் திகதி சனி மாலை 5 மணிக்கு விளக்கமளிப்பார். ஆர்வம் உள்ளவர்களை கலந்துகொள்ளுமாறு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வர இந்து சமய பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் வேண்டிக்கொள்கின்றனர்.

காலை மாலை இரு வேளைகளிலும் உங்களுக்காக யோகாசன வகுப்புகள்

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழக தலைமையகத்தின் நாள்தோறும் காலை 6 மணி முதல் 7 மணி வரையும் மாலை வேளைகளில் திங்கள் முதல் வியாழன் வரை 7 மணி முதல் 8 மணி வரையும் யோகாசன வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு

T. ஆனந்தரவி – 077704854<br>0777-274859

இடம்- இல. 3 றிஜ்வே பிளேஸ்<br>கொழும்பு – 04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யானைக்கு மரியாதை.

ஆஸ்கா் பரிசு, நோபல் பரிசு, புலிட்சர் பரிசு ஆகிய சர்வதேசய பரிசுகளைப் பற்றி நாம் எல்லோரும் கேள்விப் பட்டிருக்கின்றோம்.

ஆனால் ஒரு யானைக்கு நோபல் விருது கிடைத்திருப்பதை அறிவீர்களா? இந்தியாவில் கேரள மாநிலத்து குருவாயூர் கிருஷ்ணர் கோவிலில், பத்மநாபன் என்ற பெயர் கொண்ட யானை உள்ளது. அங்குள்ள சுமார் எழுபது யானைகளில் பத்மநாபன் என்ற பெயர் கொண்ட யானை உள்ளது. அங்குள்ள சுமார் எழுபது யானைகளில் பத்மநாபன் மிகப் புகழ் பெற்ற யானையாகும்.

பத்மநாபன் குருவாயூர் கோவிலுக்கு ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றியதைப் பாராட்டி அதற்கு கஜரத்னா என்ற விருது வழங்கப்பட்டது. இந்த பட்டமளிப்பு விழாவில் பத்மநாபன் முன்னணியில் செல்ல சுமார் 60 யானைகள் கொண்ட ஒரு பிரமாண்டமான ஊர்வலம் மம்மியூர் கோவிலிலிருந்து கிளம்பி குருவாயூர் கோவிலை அடைந்தது. பதமநாபனை பூரண கும்ப மரியாதைகளுடன் கோவில் நிர்வாகத்தினர் கௌரவித்து அதற்கு பட்டம் வழங்கினர்.

1954ஆம் ஆண்டு ஜனவரி 18ந் தேதி பத்மநாபன் குருவாயூருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது. அந்த சமயம் அதன் வயது 14. தன்னுடைய உருவத்தாலும் தன்னுடைய செயல்களாலும், பத்மநாபன் அனைவரையும் வெகு சீக்கிரத்தில் கவர்ந்து விட்டது.

சமீபத்தில் மற்றொரு கோயில் திருவிழாவிற்காக அந்தக் கோயில் நிர்வாகத்தினர் பத்மநாபனை விரும்பினர். அதற்கான வாடகைப் பணமாக குருவாயூர் கோயிலுக்குக் கொடுத்த தொகை எத்தனை தெரியுமா? 2,22,222 ரூபாய் இந்தியப் பணம். ஒரு யானையை வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தொகைகளில், மிக அதிகத் தொகை இது தான்.

தொகுப்பு:
உதயா
பத்மாவதி இந்து சமய பாடசாலை

# IQ Test

Very tricky math! Note: This must be done in your head only. Do NOT use paper and pencil or a calculator. Try it: Take 1000 and add 40 to it. Now add another 1000. Now add 30. Add another 1000. Now add 20. Now add another 1000. Now add 10. What is the total?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னேஸ்வர ஆலயம் பற்றி மனதில் பதிந்த பதிவுகள்.



29.08.2004 அன்று ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வர இந்து சமய ஆசிரியர்கள் 18 பேர், மாணவர்கள் 67 பேர், பெற்றோர்கள் 48 பேர் ஆகியோர் கல்விச்சுற்றுலாவின் போது சென்றதின் மூலம் இவ் விடயங்களை அறிந்து கொண்டனர்.

★ சிலாபம் என்ற இடத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும்.

★ இலங்கையின் பஞ்ச ஈஸ்வரங்களான கோணேஸ்வரம், கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டேஸ்வரம் அத்துடன் முன்னேஸ்வரமும் ஒனறாகும்.

★ இவ்வாலயம் குபேரன், இராவணன், இராம பிரான், ஆகியோருடன் தொடர்பு பட்டதால் கி.மு 4400 ஆண்டளவிலே அமைக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்கப்படுகிறது.

★ இராவண வதத்தின் பின் பிரம்ம தோஷம் நீங்க இராமபிரான் இவ்வாலயத்தை வழிபட்டுச் சென்றுள்ளார்.

★ ஆலய மூர்த்தியின் திருநாமம் முன்னைநாதர், அம்பாளின் திருநாமம் வடிவாகாம்பிகை.

★ தெதுரு ஓயா என்று அழைக்கப்படும் ஆறு முன்பு மாயவன் ஆறு என வழங்கப்பட்டது. இங்கு இராமபிரான் மானாவாரி என்ற கோயிலைக் கட்டி வழிபாடினார் என்று சொல்லப்படுகின்றது.

★ வேத வியாசர் ஒரு முறை செய்த பாவத்தை போக்குவதற்கு மாயவன் ஆற்றங்கரையில் (தெதுரு ஓயா) வியாசர் என்ற பெயரில் மடமொன்றைத் தாபித்து வழிபாடு செய்து விமோசனம் பெற்றார்.

★ காசி செல்வதன் மூலம் பாவம் தீரும் என்பர். அதே போல் காசி விஸ்வநாதர் ஆலய அமைப்பை ஒத்ததாகவும் காசிக்குச் செல்ல முடியாதவர்கள் முன்னேஸ்வரம் சென்று பாவத்தை போக்கலாம் என்றும் தட்சிணகைலாயமலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*'வாரண சியாத் கிருதம் பாபம்*
*முன்னேஸ்வரம் வினஸ்யதீ"*

★ குளக்கோட்டு மன்னன், பராக்கிரமபாகு மன்னன் ஆகியோர் இவ்வாலயத்திற்கு பாரிய உதவிகளை செய்தனர்.

★ முன்னேஸ்வர ஆலயத்தில் 28 நாட்களைக் கொண்ட ஒரு மகோற்சவமும் 10 நாட்களைக் கொண்ட மற்றுமொரு மகோற்சவமுமாக இரு மகோற்சவங்கள் நடைபெறுகின்றன.

★ ஆவணி மாதத்தில் நடைபெறும் 28 நாள் மகோற்சவ தீர்த்தம் மாயவன் ஆற்றிலும், மாசி மாதத்தில் நடைபெறும் 10 நாள் மகோற்சவ தீர்த்தம் மடு என்று அழைக்கப்படும் நீர் நிலையிலும் நடைபெறும்.

★ 1962ம் ஆண்டில் ஸ்ரீ பாலசுப்பிரமணியம் குருக்களினால் நடாத்தப்பட்ட கோடி அர்ச்சனை சிறப்பு வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகின்றது.

★ 200 பேர் நிற்கக்கூடிய பாரிய மூலஸ்தானம் காணப்படுகின்றது.

★ முன்னேஸ்வர ஆலயத்தில் இராஜ கோபுரம் கிடையாது. 50 அடி உயரமுடைய ஸ்தூபி காணப்படுகிறது. இது இந்தியாவில் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் ஸ்தூபியை ஒத்தது.

★ ஸ்தல விருட்சம் வில்வம்.

*தொகுப்பு :- S.நிமேஷிதா.*
*(ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர இந்து சமய பாடசாலை – ஆசிரியர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை இலக்க எண்ணையும் எத்தனை இலக்க எண்ணாலும் ட்ராக்டென்பர்க் முறையில் எளிதாக பெருக்கலாம்.

உதாரணத்துக்கு 213x121 என்பதை முதலில் பார்ப்போம்......

மூன்று இலக்க எண்ணால் (121) பெருக்குகிறோம என்பதால் பெருக்கப்பட வேண்டிய (213) எண்ணுக்கு முன்னால் 3 பூஜ்ஜியங்களை போட்டுக்கொள்ள வேண்டும்.

முதல் ஸ்டெப்: இரண்டு எண்களிலும் உள்ள கடைசி இலக்க எண்களை பெருக்கி கோட்டுக் கீழே போட வேண்டும்.

<u>000213 x 121</u>
3

இரண்டாவது ஸ்டெப்: இரண்டு எண்களிலும் உள்ள கடைசி இரண்டு இலக்குகளை குறுக்கு பெருக்கு... அதாவது வெளி ஜோடியை பெருக்கி உள்ஜோடியை பெருக்கி இரண்டையும் கூட்டி விடையைப் போட வேண்டும்.

<u>000213 x 121</u>
13

மூன்றாவது ஸ்டெப்: இரண்டு எண்களிலும் உள்ள கடைசி மூன்று இலக்க எண்களை குறுக்கு பெருக்கு.. அதாவது வெளி ஜோடி, நடு ஜோடி, உள்ஜோடி என பெருக்கி மூன்றையும் கூட்டி கோட்டுக்கு கீழே போட வேண்டும்.

<u>000213 x 121</u>
113

நான்காவது ஸ்டெப்: பெருக்குகிற எண் மூன்று இலக்கங்களை கொண்டது. எனவே, பெருக்கப்பட வேண்டிய எண் எத்தனை இலக்கமாக இருந்தாலும் கடைசி மூன்று இலக்கங்களை பெருக்கியதும் அடுத்த ஸ்டெப்பில் ஒரு இலக்கம் நகர்த்தி, குறுக்கு பெருக்கல் செய்ய வேண்டும்.

<u>000213 x 121</u>
5773

ஐந்தாவது ஸ்டெப்: அதேபோல, இன்னொரு இலக்கம் தள்ளி குறுக்கு பெருக்கல்......

<u>000213 x 121</u>
25773

இதே, நான்கு இலக்க எண்ணால் பெருக்குவதை மின்னலாக பார்ப்போம்....

*அடுத்த பக்கம் .....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்டெப்: 1

<u>00002103x3214</u>
2

ஸ்டெப்: 2

<u>00002103x3214</u>
42

ஸ்டெப்: 3

<u>00002103x3214</u>
042

ஸ்டெப்: 4

<u>00002103x3214</u>
9042

ஸ்டெப் : 5

<u>00002103x3214</u>
59042

ஸ்டெப் : 6

<u>00002103x3214</u>
759042

ஸ்டெப்: 7

<u>00002103x3214</u>
6759042

நிறைய பிராக்டீஸ் செய்துவிட்டால், இப்படி எவ்வளவு நீளமான எண்களையும் ஈஸியாக பெருக்கிவிடலாம்......

*தொகுப்பு: ஆர்த்தி*
*ABM*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகப் புதிர் போட்டி (அக்டோபர் 2004)

இந்து மதத்திற்காய் தன்னை அர்ப்பணித்தவர், சங்கநாத சஞ்சிகையின் ஸ்தாபகருமான அன்னை செல்வம் கல்யாண சுந்தரம் நினைவாக நடாத்தப்படும் போட்டி.

பகுதி-1 சரியான விடையின் கீழ் கோடிட்டு அனுப்பவும்.

1) தட்சன் மகளின் பெயர் இது?
அ) சதிதேவி ஆ) சசிதேவி இ) பார்வதி

2) தத்தாத்ரேயரின் தாய் இவள்?
அ) அகலிகை ஆ) அருந்ததி இ) அனுசூயை

3) இந்தியாவிலுள்ள சக்தி பீடங்களில் ஒன்று இது?
அ) உஜ்ஜயினி ஆ) ஹிங்லாஜ் இ) சீதா குண்ட்

4) வாமனர் பிறந்த நட்சத்திரம் எது?
அ) உத்தராடம் ஆ) புனர்பூசம் இ) திருவோனம்

5) வினாயகரின் பிள்ளை இவன்?
அ) முற்கலன் ஆ) லாபன் இ) சிகாமணி

6) கபிலரிடமிருந்த சிந்தாமணியைப் பறித்த அரசன் யார்?
அ) ஷேமன் ஆ) கணன் இ) பிநமதன்

7) சபரிமுனிவரின் சாபத்தால் மூஷிகமான கந்தர்வனின் பெயர் என்ன?
அ) சுமந்து ஆ) மயெச்சுதன் இ) கிநவிஞ்சன்

8) பதினாறு தளத்தாமரை லலிதா தேவியின் எந்த இடத்தில் உள்ளது?
அ) அனாகதம் ஆ) விசுத்தி இ) மணிபூரகம்

9) ஜலாந்தர பீடத்தின் அதிதேவதை யார்?
அ) வஜ்நேஸ்வரி ஆ) வாமகேஸ்வரீ இ) கர்ஷிணி

10) அம்பிகையின் பதினாறு வயது வடிவத்தின் பெயர் இது?
அ) சியாமளா ஆ) கௌரி இ) மாலினி.

*(தொடர்ச்சி அடுத்த பக்கம்..).*

முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் இலவச கணித, ஆங்கில, தமிழ், வகுப்புக்கள் உங்கள் பிள்ளைகளுக்காக கற்பிக்கப்படுகிற

**'Teaching not a job, but it is an art'**

மேலதிக விபரங்களுக்கு:- 0777-274859.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் புதிர் போட்டி

பகுதி-2 சரியான விடையை எழுதி அனுப்பவும்.

1) எந்த யுகத்தில் கண்ணனின் அவதாரம் இடம் பெற்றது?
2) சைவப் பெரியார்களில் தொகையடியார்கள் தனியடியார்கள் எத்தனை பேர்?
3) உபநயனம் என்றால் என்ன?
4) 'ஸ்ரீ மத் நாராயணன்' எந் நாளில் என்ன பட்சத்தில் யாருடைய அவதாரமாக பிறக்கப்போவதாக தேவியிடம் கூறினார்?
5) வைஷ்ணவ அடியார்களின் பெயர் சில தருக?
6) 'நாம சரித மானஸ்' எனும் நூலை வட நாடு முழுவதும் பரப்பிய அடியாரின் பெயர் என்ன?
7) 'உயிரும் பிரம்மமே' என்ற தத்துவத்தை நிலை நாட்டிய பெரியார் யார்?
8) கண்ணன் தனது குருவிற்கு குரு தட்சணையாக எதனை வழங்கினார்?
9) திருக்காளத்தி மலையிலுள்ள லிங்கத்தின் பெயர் என்ன?
10) எமது சமயம் கூறும் முக்கியமான தத்துவம் என்ன?

உங்கள் விடைகள் வந்து சேர வேண்டிய முகவரி:-
சங்கநாத ஆன்மீக புதிர்போட்டி,
இல-03 றிக்வே கபிளேஸ்,
கொழும்பு 04.

வந்து சேர வேண்டிய இறுதி திகதி 10-10-2004. தெரிவு செய்யப்படும் 5வர்களுக்கு அன்னை செல்வம் கல்யாண சுந்தரம் நிதியத்தினால் பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

திருக்குறள்

கீழே காணப்படும் திருக்குறளில் விடப்பட்ட சொல்லை நிரப்புக.

1. .............................. பொறியில் குணமிலவே எண் .
............................................................... வணக்காத தலை

2. தன்னுயிருக்கு .......................... தானறிவான் என்கொலோ
............................ இன்னா செயல்

3. செயற்கை அறிந்தக் ........................ ............................
இயற்கை அறிந்து செயல்

4. குணலும்.................... குற்றமும் குன்றா
......................... அறிந்தியாக்க நற்பு

5. ........................... ரத்தக்காறக் காணின், சுரப்பின்
அவர் பழி; தம்பழி ...................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவையில் இன்பம் காணும் தயாம்மா...

பெண்ணினத்திற்கு பெருமைத் தரக் கூடிய மதிப்பிற்கும் புகழுக்குமுரிய போற்றத்தக்க இம்மாதச் சங்கநாதப் பெண்மணி:- திருமதி. தயாம்பிகை பாலசிங்கம் மகின்தா அவர்கள். இலங்கையில் இந்து சமயம், தமிழ், கலைகள் என்பவற்றினை வளர்க்கும் முகமாக பலர் அயராது சேவையை வழங்குகின்றனர். இத்துறையில் தமது வாழ்க்கையின் அதிகப்படியான நாட்களை கலைகளை வளர்க்கும் பொருட்டு பயன்படுத்திக்கொண்டு இருக்கும் திருமதி. தயாம்பிகை பாலசிங்கம் மகின்தா அவர்கள் எமது சஞ்சிகையின் சிறப்புக்குரிய இம்மாதப் பெண்மணியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை பெண்ணினத்திற்கே பெருமை சேர்க்கக் கூடியதொன்றாகும்.

திருமதி. தயாம்பிகை பாலசிங்கம் மகின்தா அவர்கள் பரதக்கலையை தமது ஏழாவது வயதில் கற்கத் தொடங்கினார். அவரது குரு திருமதி. கமலா ஜோன் பிள்ளை ஆவார். தாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்பதற்கிணங்க தாம் கற்ற பரதக்கலையை இவ் இலங்கை திருநாட்டிற்கு சேவையாக 40 வருட காலங்கள் வழங்கினார். தற்போது 53 வருடங்களை தொடர்ந்து செல்லும் கலாலயா பாடசாலையின் தற்போது அதிபராக கடமையாற்றுவது அவரது கலைத்திறமைக்கும் அவருக்கும் கிடைத்த பரிசு எனலாம். பரதக்கலையில் மட்டும் தமது திறமையை நிறுத்தி விடாமல் சங்கீதக்கலையை திரு. D.S, மணி பாகவதரிடமும் வீணையை மீட்டவும் கற்றுத் தேர்ந்தார்.

அவரது கணவர் திரு. மகின்தா அவர்கள் வசீகரத் தன்மையும் விசேட ஆற்றல்கள் நிறைந்த ஒரு மனிதராக இருந்தார். பெற்றோருக்கு நல்ல மகளாகவும் புகுந்த வீட்டுக்கு சிறந்ததொரு மருமகளாகவும் விளங்கினார்.திருமதி. தயாம்பிகை பாலசிங்கம் மகின்தா என்ற அவரது பெயரை நோக்கிப் பார்த்தால் பாலசிங்கம் என்பது அவரது (கணவரின் தந்தையார்) மாமனாரின் பெயராகும். இதிலிருந்தே அவரது புகுந்த வீட்டுப் பெருமையை நாம் விளங்கிக் கொள்ளலாம்.இவர் சுவாமி சின்மயானந்தாவின் சீடராக விளங்கினார். பின் இலங்கையில் சின்மயா மிஷனை ஸ்தாபிக்க தமது முழுப் பங்களிப்பை வழங்கினார். அது மட்டுமன்றி இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்திலும், சைவ மங்கையர் கழகத்திலும் அங்கத்தவராக விளங்குகின்றார்.

திருமதி. தயாம்பிகை அம்மா அவர்கள் அவரது திருமண வாழ்வில் இணையுமுன் பிறருக்கு சேவை செய்வதை தமது சமூக சேவையாக கொண்டு செஞ்சிலுவை சங்கத்துடனும் இணைந்து சேவை ஆற்றினார். அவர் திருமண வாழ்வில் இணைந்த பின் இலங்கை புற்றுநோய் சங்கத்திற்காக தனது சேவையை வழங்கினார்.

யுனிசெப் நிதியத்தினால் உருவாக்கப்படவுள்ள மூளாய் ஆஸ்பத்திரிக்கு தனது முழுப் பங்களிப்பை வழங்கினார்.

'She keeps the word, and keeps the time'

அதாவது இவர் நேரந்தவறாமைக்கு ஒரு சிறந்த பெண்மணியாக விளங்கினார். அத்துடன் அவர் தன்னுடைய இம்முதிய வயதில் கூட இதைக் கடைப்பிடிப்பதுடன் கலைத்துறைக்கு சேவை செய்வதில் இன்னும் இளமையாகவே உள்ளார். அம்மாவுக்கு எல்லாரை பற்றியும் எல்லாத் துறைகளைப் பற்றியும் தெரிகிறது.

AGE IS NO BARRIER FOR SERVICE

இவருடைய கலைச் சேவையானது நாளைய மங்கையர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என சங்கநாதம் சார்பில் வேண்டிக் கொள்கிறோம்.

*ஆக்கம்*
*திருமதி. மகேஸ்வரி சிவகுமாரன்*

**சங்கநாதம்**
**தொடர்பு : 2584145**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வெல்வதற்கான யோக ரகசியங்கள்

இடை, பிங்களை, சுஷூமனை எனப்படும் மூன்று நாடிகளையும் அடக்கி பிராணனை சுஷூம்னையில் நிறுத்தி வைத்து மனத்தைத் தூய்மையாக்க வல்லவன் எவனோ அவனே காலன் அல்லது யமனை ஏமாற்றவோ அல்லது வெல்லவோ முடியும்..

அவ்வாறு பிராணனை சுஷூம்னையில் அசையாது வைத்திருப்பவன் அதை பிரம்மரந்திரத்தை நோக்கிச் செலுத்த முயலவேண்டும். அப்பொழுது அவன சமாதி நிலையை அனுபவிப்பான். யோகிக்கு அவருடைய மரண நேரம் தெரியும். அவர் தன்னுடைய பிராணனை சுஷூம்னைக்குள் எடுத்துச்சென்று பிறகு பிரம்மரந்திரத்தினுள் செலுத்தி காலனைத் தோற்கடித்து விடுகிறார்.

மரணம் அல்லது காலத்தைக் காலன் என்று அழைக்கின்றனர். காலத்தால் ஏராளமான சம்பவங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்படுகின்றன. ஆகவே அவன் காலன் என்று அழைக்கப்படுகின்றான் - காலாயதி இதி காலஹ - பிறப்பும் இறப்பும் காலத்திற்குட் பட்டிருக்கின்றன. காலத்தைக் கடந்து செல்வதாகும் : அதாவது அமரத்துவத்தை அடைவதாகும்.

சூரியன் அல்லது பிங்களை, சந்திரன் அல்லது இடை எனப்படும் இரு நாடிகளும் சகல ஜீவராசிகளுக்கும் பகலையும் இரவையும் நிர்ணயிக்கின்றன. அவை இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது பகலும் இரவும் ஒன்றன்பின் ஒன்றாகக் கழிந்து கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக ஆயுளும் கழிந்து கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் சுவாசத்தை வெளிவிடும் பொழுதும் நீங்கள் நான்கு அங்குல சுவாசத்தை இழக்கின்றீர்கள். நீங்கள் உள்ளே இழுப்பது எட்டு அங்குலம் ஆனால் வெளியே விடுவது பன்னிரெண்டு அங்குலம். சாதாரண (அழியக்கூடிய) ஜீவன்களிடம் சந்திர நாடிதான் வேலை செய்கின்றது. சந்திர நாடி மூலம் ஒருவன் நீண்டகாலம் ஜீவித்திருக்க முடியும். இடை, பிங்களை ஆகிய இருநாடிகளின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் ஒருவன் இன்னும் நீடூழி காலம் வாழ முடியும்.

சுஷூம்னை தான் காலத்தை உண்ணும் வலிமை படைத்தது. இது தான் மிகப் பெரிய யோக ரகசியம். சுவாசத்தை சுஷூம்னையில் கட்டுப்படுத்துவதன் மூலம் ஒருவன் நல்ல ஆரோக்கியத்தை அனுபவிப்பதோடு வரையறையின்றி ஆயுளையும் நீடித்துக் கொண்டு செல்லுகின்றான். சுவாசத்தை சுஷூம்னை வழியாக சிரசின் உச்சிக்குக் கொண்டு வருவதன் மூலம் ஒருவன் அமர நிலையை எய்துகின்றான். அவன் அமிர்தத்தைப் பருகுகின்றான்.

நீங்கள் மரணத்தைக் கண்டுபிடிக்கும் பொழுது உங்கள் சுவாசத்தை சுஷூம்னைக்குள் அடக்கிக் கொண்டால் யமன் உங்களை விட்டு ஓடிவிடுவான். இது தான் நீங்கள் மரணத்தை வென்று நல்ல ஆரோக்கியத்தையும் எல்லையற்ற ஆயுளையும் பெறுவதற்கான வழியாகும்.

ஸ்ரீ. சுவாமி சிவானந்தா அவர்களின் நூலிலிருந்து

தொகுப்பு :
வி. காந்தீபன்
பத்மாவதி இந்து கலை பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவில்லாப் பயணமாக தொடரும் இலங்கையின் சமாதான முயற்ச்சிகள்...

**- அரசியல் பார்வை -**

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தையானது நீண்டதொரு பயணமாக உள்ளது. நீண்டு செல்வது ஒரு பிரச்சனையான விடயம் அல்ல ஆனாலும் அது நிச்சய மற்றதாகி விடுமே என்பது தான் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள சங்கடமான சந்தேகமாகும்.

இச் சமாதான முன்னெடுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது காணப்பட்ட ஆர்வமும் ஆர்ப்பாட்டமும் இன்று எப்படி உள்ளது என்றால் இன்று ஆர்வத்தின் இடத்தையும் சேர்த்து ஆர்ப்பாட்டம் பிடித்துள்ளது. இச்சமாதானம் இன்றோ நாளையோ இல்லாமல் போய்விடும் என்று உண்மையிலே பாதிக்கப்பட்ட மக்கள் ஏங்கிக்கொண்டிருக்க இல்லாதவற்றையெல்லாம் கற்பனை செய்து கொண்டு பேரினவாதிகளும் யுத்தத்தில் குளிர்காய்ந்த சுயநலவாதிகளும் நீலிக் கண்ணீர் விடுகின்றனர். உண்மையிலே இச்சமாதானமானது மக்கள் எதிர்பார்ப்பது போன்று மிகவிரைவாக இல்லாமல் போகப் போவதும் இல்லை. அதே நேரத்தில் மக்கள் எதிர்பார்தது போன்று பெரியளவில் சமாதானம் மலர்ந்து நாம் எல்லா வகையிலும் சுதந்திரத்தைப் பெறுவோம் என்பது நீர் மேல் எழுத்துப் போன்றது. அதே நேரம் வெளிநாட்டுத் தலையீடுகளும் பொருளாதார நெருக்கடியும் இன்னொரு யுத்தகத்தை மிகவிரைவில் ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கப் போவதும்மில்லை எனவே எமது சமாதானக் கனவு என்பது இன்று காணப்படுவது போன்று ஒரு நிலை தான் மழையுமல்ல வெயிலுமல்ல மப்பு மந்தாரம் என்பது போன்று இன்று காணப்படும் இன் நிலையே தொடர்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே இன்று காணப்படும் இந்நிலை தொடர்ந்து குறைந்து மூன்று ஆண்டுகளுக்காவது தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இக்காலப்பகுதியில் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் தமது நலன்களைப் பேணும் விதத்தில் தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அடிக்கடி முரண்பாடுகள் எழக்கூடும் என்பதில் ஆச்சரியம் இல்லை.

இதனால் அடிக்கடி போர் வெடிக்கும் என்ற பதட்டமும் இவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டதும் ஏற்படும் அமைதி சமாதானம் தோன்றிவிட்டதாகவும் காட்டும். இவ்வாறு அடிக்கடி இவ்வாறான தோற்றப்பாடுகள் தோன்றிக்கொண்டே இருக்கும் எனவே அல்லலப்படும் பொது மக்கள் இச்சூழலுக்கு ஏற்ப வாழப்பழகிக் கொள்வதே பொருந்தப்பாடாக அமையும். எமது அரசியல்வாதிகளை பொறுத்தவரை இச்சமாதான சூழலை எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறியாகும். இது ஒரு நல்ல சந்தர்ப்பம் தமது வாக்குப்பலத்தையும் பாராளுமன்ற உரிமைகளையும் கொண்டு பொது நல நோக்கத்துடன் செயற்படுவார்களாயின் எம் வாழ்வு ஒளி பெறுவது வெகுதூரத்தில் இல்லை.

*- ஸ்ரீஸ்கந்தராஜா*

**நம்புங்கள்**

உடம்பிலேயே ரொம்ப வலுவான தசை ? நாக்கு !

கண்ணைட் திறந்துகொண்டு தும்முவது சாட்தியமில்லை.

மூச்சை அடக்கிக்கொண்டு தற் கொலை செய்துகொள்ள முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## How to Make Yourself SAFE.

IN ORDER to build that nest egg for the future, you'll need to start saving to generate some cash. Here are six strategies for developing the habit.

1. **Pay off your debt.** The smart way to start saving is to clear your debts first. Think a moment – if you have a credit card debt, you are paying high interest rates on it. Commit yourself to paying off a see set amount each month. Then, when the debt has gone, put the money you would have paid in interest each month in to a regular savings plan.
2. **Save some thing.** Make small daily savings. They soon mount up. Put spare change to a jar; take a packed lunch; cut down on those expensive cappuccinos – or those cigarettes. At the end of the month, you'll have a small sum to put in to savings plan.
3. **Put windfalls to work.** Perhaps you work over time recently, received a tax refund, a bonus or a small inheritance? It's not part of your regular income – so you won't miss it if you save it.
4. **Sign up at work.** If your employers puts money in to the company pension scheme, join it. Many 140 people have stopped paying into company schemes, fearing that their money may not be secure.


Alternatively, pay in to your own pension through a stakeholder scheme. Charges are low and you often can't touch the money until you reach a set age – so there's no temptation to spend it now. And there is tax relief on every thing you pay in.

5. **Get automated**. However you decide to save, the best way to make sure you do it is to have it done automatically. Set up a standing order which puts payments straight in to pension, mortgage, stock market investment or savings account.

You'll miss the money less – it just becomes another regular bill. The only difference is you're paying it to yourself!

6. **Over pay.** You are already making a regular mortgage payment, so why not write a slightly larger cheque? It can be as good as saving it means you will own your home more quickly and end up paying much less interest. One good tip is to look back at what you were paying when interest rates were higher. Then pay that much now.

**Compiled by J.Shamala. (ABM)**



யார் உயரமானவர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HINDUS PRAY TO MOTHER DURGA IN CATHOLIC CHURCH IN TRINIDAD AND TOBAGO

It can only happen in multy-racial and multy-religious Trinidad and Tobago. The tradition that started since the arrival of East Indians from Uttaer Pradesh and Bihar in 1845 continues to date. Thousands of Hindu women solemnly attended Good Friday celebrations at the Siparia Roman Catholic church, some 70 kilometers from the City of Port-of-Spain to pay homage to "Saparee Mai" whom Catholics adore and revere as the Virgin Mary, Mother of Christ, whilst Hindus offer oblations and prayers to her as Mother Durga or Mother Kali. This is the only place in the world that one can find Hindus and Christians pray together on such an auspicious day as a Good Friday. It is an annual ritual. Scores of buses, maxi-taxis and cars and other modes of transport are used to transport people from all parts of Trinidad for this very solemn moment.

Hindu women offered prayers to Mother Durga or Mother Kali in this form with olive oil, candle, sweets and cash donations with the hope of there prayers will be answered. The Catholic Priest will receive the offerings and add his blessings to the giver. They believe that any of their requests will be fulfilled once they are done with the greatest of faith and reverence.

Besides the devotional moment, Hindu women also do the first cutting of the hair of the boy child there. They also give generously to the poor, the aged and the destitute that flock the precincts of church from as early as Holy Thursday.

## FORMULA TO FIND GOD:

A British mathematician says the odds on the God existing are two-to-one in favor if one believes in a mathematical probability theorem. Stephen Unwin, a graduate of London's Imperial College, used the 200-year-old Bayies Theorem named after Thomas Bayes, an 18th century mathematician who was also a Presbyterian minister, to calculate that there is a 67 per cent chance that God existed. Unwin weighed the existence of evil and suffering against miracles, divided into supernatural events and miracles that occur when prayers are answered. He also factored in free will, innate goodness in humans and sense of morality and the many arguments for and against God's existence.

**Compiled by**
**V. Damayanthy**
**(ABM)**

**அட அப்படியே சங்கதி ?**

முதலைகளால் மனிதர்கள் அல்லது நாய்களைப் போல் நாக்கை நீட்ட முடியாது.

றும்புகளால் தங்கள் உடல் எடையை விட 50 மடங்கு வெயிட்டான பொருள்களைட் தூக்க முடியும். 30 மடங்கு கனமான பொருள்களை இழுக்க முடியும். போதையில் அவை எப்போதுமே வலது பக்கம்தான் சாய்கின் றன.

னிக் கரடிகளுக்கு இடது கைப் பழக்கம்.

தெள்ளுப் பூச்சிகளால் தன் உடல் நீளட்தை விட 350 மடங்கு தூரம் தாவ முடியும். இது மனிதர்கள் ஒரு கிரிக்கெட் மைதானட்தைட் தாண்டுவதற் கு சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WHAT IS PRAYER?

PRAYER is depending on God for help in distress.
Prayer is asking God for enlightenment.
Prayer is communication with God, through single minded devotion
Prayer is asking for peace from God when the soul is restless.
Prayer is surrendering on self to God completely.
Prayer is giving an opportunity to God to comfort the devotee.
Prayer is making friendship with God.
Prayer is melting the mind and ego in silence in God.
Prayer is thanks-giving to God for all His blessings.
Prayer is expecting God to decide what is best for you when you are in a dilemma.
Prayer is requesting God to give strength, peace and pure intellect.
Prayer is asking God to purify the heart and make you abide in him for ever.

Swami
Sivananda

## THE PRINT MEDIA

How much do we READ? How do we read in SriLanka ? A lot less than our neighbors. Statistics compiled by the Central Bank reveal that there are only 29 daily news papers per 1000 people in SriLanka, while the numbers of India and Bangladesh are a lot higher at 60 and 53. In fact, SriLanka only rates higher than Nepal where the number of daily news papers per 1000 persons is just 12. These comparisons are interesting in the light of the fact that we have one of the highest levels of literacy in the region.

(92.4 per cent in 2003)


காலை மாலை இரு வேளைகளிலும் உங்களுக்காக யோகாசன வகுப்புகள்

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழக தலைமையகத்தின் நாள்தோறும் காலை 6 மணி முதல் 7 மணி வரையும் மாலை வேளைகளில் திங்கள் முதல் வியாழன் வரை 7 மணி முதல் 8 மணி வரையும் யோகாசன வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

மேலதிக விபரங்களுக்கு....

**K.**வியாஸா – 0777 274859

**T.**ஆனந்தரவி

இடம் - இல. 3 ரிஜ்வே பிளேஸ்
கொழும்பு – 04.

**(Opp. St. Peters college)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Standing poses

### 1. Tadasana
### Mountain pose

This is the first posture to be learnt. It is the basic standing pose, with which they start and finish.

Although Tadasana is practiced from the beginning, it is difficult to master as it involves bringing the energies of the body and mind into equilibrium in a static pose. This can only be done when postural defects have been corrected by working on a variety of asanas. For this reason, beginners should become familiar with the postures gradually.

Stand with the feet together, and big goes, heels and ankle bones touching. Keep the knees straight and pull up the thigh muscles. Stretch the legs up, extend the spine and lift the front of the body. Take the shoulders back, shoulder blades in and allow the arms to hang loosely at the sides of the trunk. Relax the hands and keep the palms facing the hips. Extend the neck up and relax the face. Look straight ahead. Concentrate on centering the body: balance the weight evenly on both feet; create awareness in the soles of the feet and stretch them equally. Be conscious of extending the right and left sides of the body evenly. Keep the chest open.
Stay in the posture for 30-60 seconds when practicing Tadasana on its own; less when doing it as a stage of other poses.

**Compiled by:T. Anantharavi (ABM)**


ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஸ்ரீ பத்மாவதி இந்து சமயப் பாடசாலையின் சமூக சமய நிகழ்வுகள்.

இலங்கையின் பாரம்பரியம்மிக்க கலைக்குடும்பதிலுள்ள புகழ்மிக்க நடன ஆசிரியை திருமதி. பிரகதாம்பாள் தில்லைநடராஜா அவர்களின் நெறியாள்கையில் பிரதி சனிக்கிழமை தோறும் பரதநாட்டிய வகுப்புக்கள் நடைபெறுகிறது. ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம்

## ஓர் அறிமுகம்



## Introduction

'உடம்பினாலன்றி உணர்வு தானில்லை உடம்பினில் உத்தமனைக் காண்' என்று ஒளவையாரும் 'உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேன்' என்று திருமூலரும் கூறியது தூலாதாரமாகிய உடலை அசட்டை செய்யாமல் உறுதியாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே. ஏனெனில் உடலே உயிர்குடியிருக்கும் வீடு. உடலையும் உள்ளத்தையும் வளர்க்கும் கலையே யோகாசனம். வேதம், இதிகாசம், புராணம் என்பவை இக்கலையைப்பற்றி கூறுகின்றன. பாரதப் போரில் பிஷ்மாச்சாரியார் உத்தராயணம் வரை தன்னுயிரை பிரியவிடாமல் யோகத்தால் தடுத்து வைத்திருந்ததும் இராமாயணத்தில் சரபங்கர் சபரி ஆகியோர் யோகாீதியில் தம்முடைய உயிரை நீக்கியதும் இதற்கு சான்று பகர்கிறது.இறைவனால் அளிக்கப்பட்ட எல்லா அங்கங்களையும் யோகாசனம் மூலம் மரணம் எய்தவேண்டிய காலம் வரை இளமையாக வைத்திருப்பதோடு என்ன நோய்நொடி ஏற்பட்டாலும் அவற்றை அடித்தளம் வரை சென்று முற்றாக குணப்படுத்தவும் முடியும்.யோகப் பயிற்சி என்பது தியானமும் பிராணயாமமும் சேர்ந்து செய்யும் ஆசனமாகும். மனதை கட்டுப்படுத்தாமல் அதன் போக்கிலே விட்டு ஓய்வடையச் செய்து உடம்பின் பாரம் இல்லாமல் மனதால் தேகத்தை உணரக்கூடிய நிலைக்கு வரும்போது புலன்கள் அடங்கி சாந்தமாக இருப்பது தியானமாகும். பிராணயாமம் என்றால் மூச்சை அளவோடு உள் இழுத்து வெளிவிடுவதாகும்..

யோகாசனமானது குழந்தை தாயின் கருவினுள்ளே இருக்கும் போதே செய்யத் தொடங்குகிறது. அதாவது கைகளை முஷ்டியாக ஆதி முத்திரையில் வைத்துக்கொண்டு இருக்கும் நிலை. இது 'குழந்தை ஆசனம்' எனப்படும். குழந்தை பிறக்கும் போது அ என்ற சத்தத்தோடு பிராணர் யாமத்தோடு பிறந்து சாந்தி ஆசனத்தில் படுத்திருக்கிறது. நிமிர்ந்து படுத்துக்கொண்டு சரீரத்தை தளர்த்தி வைத்திருக்கும் போது படுத்த தன்மையும் உடம்பின் பாரமும் இல்லாமல் போய் மனதால் தேகத்தை உணரக் கூடிய தன்மையும் தேகத்தின் பிரச்சனைகளை உணர்ந்து அதை குணப்படுத்தக்கூடிய நிலையும் வரும். இந்த நிலையின் கடைசியில் மனம் ஒருநிலை பெறும். இதுவே சாந்தி ஆசன நிலையாகும். இரத்தக் கொதிப்பு, இருதயநோய், மன உழைச்சல் இருப்பவர்களுக்கு இந்த ஆசனம் சிறந்தது. மூன்று மாதத்தில் குழந்தை உடம்பு பிரட்டுதல் இடது வலது சாந்தி ஆசனம் எனப்படும்.குழந்தை முகம் குப்புறப்படுத்தல் தனுராசனம் எனப்படும். தனுராசனம் என்றால் வில்லாசனம் எனப்பொருள்படும். அதாவது உடம்பை வில்லாக வளைத்து வைத்திருத்தலாகும். சர்க்கரை வியாதி வராமல் சதைச் சுரப்பி சாறுகளை கசக்கி சர்க்கரையை அகற்றுவதோடு வயிற்றில் ஆங்காங்கே தடைப்பட்டிருக்கும் கழிவுப்பொருட்களை வெளியேற்றி பித்தப்பையை சரிவர வேலை செய்ய வைத்தும் மந்த புத்தியை மாற்றவும் செய்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை கையிலும் காலிலும் தவளும் போது பாதிசக்கராசன நிலை எனலாம். எழும்பி நிற்கும் போது 'நின்ற சாந்தி' ஆசனம் முதல் முதலாக நடக்கும்போது 'பாதசமசாந்தி' ஆசனத்தில் தான் நடக்கும். அதாவது தனது உடலின் முழுப்பாரத்தையும் பாதத்தில் உணர்ந்து தான் நடக்கிறது. பின்னர் குழந்தையின் மனதை நாம் ஆசைகாட்டி ஓடித்திரிய விடும்போது மனதின் தன்மையில் அது நடக்கத் தொடங்குகின்றது. தேகத்திற்கு ஏதுவாக நடப்பதில்லை அப்போது யோகத்தை மறக்கிறது. உடம்பை பாதசமசாந்தி ஆசனத்தில் செயற்படுத்தும் போது உடம்பில் உள்ள எல்லா அவயவங்களுடைய செயற்பாட்டுக்குரிய நரம்புகளும் பாதத்தில் முடிவதால் உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளுமே பயன்பெறும்.

ஆதிகாலத்திலே ஞானிகளும் சித்தர்களும் தங்கள் உடம்பை சக்தியுள்ளதாக வைத்திருப்பதற்காக இயற்கையை நன்றாக அவதானித்தார்கள். இயற்கை எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. ஆகவே இயக்கங்கள் தான் சக்தியின் இருப்பிடம் இதை வைத்து ஒவ்வொரு ஜீவராசினயும் எவ்வாறு இயங்குகின்றது. சக்தியை எவ்வாறு பெறுகின்றது என்று அவதானித்து ஒவ்வொரு ஜீவராசியின் பெயரிலும் சக்தியின் இருப்பிட வடிவங்களின் பெயரிலும் ஒவ்வொரு யோகாசன பயிற்சிகளையும் உருவாக்கினார்கள்.

இவ்வருங்கலையை குருமூலம் கற்பதே சாலச்சிறந்தது. இளையவர், முதியவர், ஆண்கள், பெண்கள் என எல்லோருமே இக்கலையை பயிலலாம். உடலில் உள்ள நோய்களை விரட்டி, உடலுக்கு நோய் வராமல் தடுக்கும் இவவித்தையை எல்லோரும் கற்று தனக்குத் தானே வைத்தியராக மாறி சிறப்பாக வாழ்வோம்.

**T.** ஆனந்தரவி யோகாசன
பயிற்றுவிப்பாளர்

# THE DIVINE ART OF MAKING FRIENDS.

**- By Paramahansa Yogananda.**

Friendship is the noblest human expression of God's desire to show his affection to man. God showers affection on the baby through the father and mother, but their feeling for the infant is inborn; our Creator has ordained that our parents can't help but love us. But friendship comes to us as a free, impartial expression of his love.

Two strangers meet and by the instantaneous choice of their hearts want to help each other. How does this happen? Have you even analyzed that? The spontaneous mutual desire to be friends comes directly from God. When this impulse is pure it is uncontaminated by selfishness or attraction to the opposite sex. But often it is tainted. Friendship grows on the tree of our inner most feellings; it is desecrated by unwholesome desire and selfish actions. If you put the wrong kind of fertilizer on the roots of a tree, the fruits that develop will be poor; and when you water the tree of human feeling with the emotion of selfishness, the fruit of friendship will be blemished by unworthy motives. To feel friendly towards someone just because he is rich or influential and can do something for you is not friendship. And to be attracted to someone primarily because that person has a beautiful face is not friendship. When the face loses its youthful attractiveness, the "friendship" ill evaporate.It is true that you cannot find friendship everywhere. Some persons you see everyday and never know, and others you feel you have known always. You should learn to recognize that inner cue. Wherever you are, always keep you eyes open, and if you feel divinely attracted to someone you should develop friendship with that person, because he has been you friend in some life before. There are many friends whom we have known in past lives



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

but those friendships have not yet been perfected. It is better to start building on a foundation that has already been laid than to dig for a foundation on the sands of temporary acquaintances. It is easy to think that one has many friends, until they do something hurtful to you, and then you feel deeply disillusioned.

Many people make mistakes about friends because they are deluded by the outer appearance. The only way to recognize real friends is to meditate more. You should try to find friends the divine way, and that is to purge your consciousness of all thought of facial or other appearances as factors in determining your feelings about others. If you do this, one day you will feel yourself free of delusive likes and dislikes, and you will be able to discover true friends all around you. You will feel God's friendship through those humble human channels that do not resist him. Through the pure of hearth he divine light of friendship will flow to you. You cannot attract true friends without removing from you own character the stains of selfishness and other unlovely qualities. The greatest art of finding friends is to behave divinely yourself-to be spiritual, to be pure, to be unselfish- and to start friendship where the foundation of friendship has already been laid in a past life. That is the way to find true friends.

Friendship should exist in all human relations: between parents and children, between husbands and wives, between men and men, between women and women, and between men and women. It is unconditional. When you have the impulse to be friend others, it is the presence of God that you feel. Friendship is a divine impulse. God is not satisfied to look after His human children only in the guise of parents and other relatives. He comes as friends to give us opportunity to express unconditional love from our hearts.

The more you human shortcomings drop away and divine qualities come into your life, the more friends you will have. Was not Lord Jesus a great friend to all, and Lord Buddha, and Lord Krishna? To be like them you must perfect your love for others. When you can convince others of your friendship; when you are sure, through the tests of time and many shared experiences, that a person really feels for you from the soul, and you feel for that person in the same way-not for any gain but solely because of the divine impulse of friendship-you will behold in that relationship the reflection of God.

Friendship is a great universal force. When you have a desire for friendship, then if the particular person who is attuned to you lives at the South Pole, the magnetism of friendship will nevertheless draw you together. Only selfishness can destroy that magnetism with us. He who thinks all the time of himself and no one else wrecks friendship. Such persons cannot attract friends; they cannot expand their consciousness to behold and receive the good in life.God gave you family that you may learn how to love others, and then to give that love to all. Our dear ones are taken away from us by death and other circumstances that we may learn not to love persons in merely human relationships but to be in love with Love Itself, which is God, the Being behind all human masks.Friendship means investing your love where there is no prejudice of human relations. IN married life there is the compulsion of sex and in family life there is the compulsion of racial instincts. But in friendship there is no compulsion.Let us give our love to all. Let us pray that we meet our friends of the past and prove our friendship with them, so that we can understand and merit the friendship of God. Unless we are united with all His Children through a spirit of friendliness, we will not be united with God.

***Compiled by Sophia (ABM)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Ariyabatta Bala Mandir Hindu School
## Birthday Wishes for the month of October

| | | |
|---|---|---|
| 3rd Oct | - | Lakshi Ganesharaja |
| 4th Oct | - | Sivanesan Senthuran |
| 6th Oct | - | Saaksha Chandrasegaran |
| 10th Oct | - | Ramcharan Ramanaharan |
| 12th Oct | - | Sudharshan Balasubramaniam |
| 14th Oct | - | Sujievan Kulendran |
| 15th Oct | - | Aksika Ponsegar |
| 18th Oct | - | Krishanth Kugadharan |
| 20th Oct | - | Gowtham Gunasekaram |
| 22nd Oct | - | Krithiga Dhakshayanie |
| 23rd Oct | - | Saathvika Krishnamoorthy |
| 25th Oct | - | Sivaranjan Sivanthilingam |
| 28th Oct | - | Sri Madangi Sri Satgurunadhan |
| 29th Oct | - | Praveen Raveendran |
| 30th Oct | - | Segar Sanjith |
| 31st Oct | - | Ramachandran Thivaharan |

**ஸ்ரீ பத்மாவதி அறநெறிப் பாடசாலை**
**மாணவிகளின் கலை நிகழ்ச்சி**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு தேவஸ்தானம்







பெருமாள் உள் வீதி
வலம் வரும் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தி புத்தி விநாயகர்



வராக அவதாரம்

கூர்ம அவதாரம்



துர்க்கை அம்மன்



ஆதி லட்சுமி அம்பாளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருஷ்ணர் அவதாரம்



உற்சவ மூர்த்தி



நரசிம்ம அவதாரம்

வாமன அவதாரம்
(பெருமாள்)



ஆதி லட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAM BROTHERS

ரம்மியமான ஆடைத் தெரிவுகளுக்கு

**140 Main Street**
**Colombo 11**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வாழ்த்துகின்றோம்**

**28.08.2004**

**எல்பிஸ்ரன் அரங்கத்தில்**


**தனது பரதநாட்டிய அரங்கேற்றத்தை**

**நிகழ்த்திய**

**செல்வி.நிஷாந்தி ஜெகந்நாதனை**

**வாழ்த்துகின்றோம்**

**சங்கநாதம் குறுக்கெழுத்துப்போட்டி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதத்தில் ஆயுர்வேதம்

இந்துசமயத்தின் புராதனமான நான்கு பெரும் வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவாகும்.
இவற்றுள் இருக்கு, அதர்வண வேதங்களின் உபவேதமாக ஆயுர்வேதம் கூறப்படுகின்றது. பிரம்மதேவன் பிரஜாபதிக்கும், அவர் அஸ்வினி குமாரர்களுக்கும், அஸ்வினிதேவர்கள் இந்திரனுக்கும், இந்திரன் பரத்வாஜர், தன்வந்திரி, காசிபர் போன்றோருக்கும் உபதேசித்ததாக வரலாறு கூறுகின்றது.

ஆயுர்வேதம் என்றால்:- ஆயுள் (ஆயுசு+வயது) அதாவது உயிர் உடலுடன் வாழுதல் என்பதாகும். வேதம் என்றால் ஒன்றைப்பற்றிய முழுமையான அறிவியல் (விஞ்ஞானம்) என்பதாகும்.உடல் (பிண்டம்) பற்றியும், உடலியக்கம்பற்றியும், வாழும் உலகம் பற்றியும், பருவகாலநிலைகள்பற்றியும், கோள்கள் (அண்டம்) பற்றியும், அதன் இயக்கத்தின தாக்கம் (ஜோதிடம்) பற்றியும், பஞ்சபூதம் பற்றியும், அதன் இயக்கங்களின் ஒன்றுபட்ட முரண்பட்ட நிலைகள் பற்றியும், நோய் வந்தால் வந்தநோயைத்தீர்ப்பதற்கும், மீண்டும் நோயுறாமலும் உடல் மீள்வலுவடைவதற்கு (முதுமையை தள்ளிப்போடுதல்) வன்மை பெறும் மருத்துவ முறைகளையும் கூறுகிறது.
இதில் ஒரு புராண வரலாறும் சம்பந்தப்படுகனிறது. தேவர்கள் சாகாவரம் வேண்டி அமிர்தம் பெறும் பொருட்டுத் திருப்பாற்கடலை கடைந்தனர். மகாமேருவை மத்தாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு ஒருபுறம் தேவரும் மறுபுறம் அசுரருமாக கடைய முற்பட்டபோது உடல் நொந்த வாசுகி நஞ்சை கக்கியது. ஊயிரை மாய்க்கும் கொடிய அவ்விடத்தை சிவன் அள்ளி உண்டபோது, உமாதேவி தன்கரத்தால் விடத்தை அவர் மிடற்றுடன் நிறுத்தினார். ஆதனால் சிவனும் திருநீலகண்டராய் கொடியபிணிபோக்கும் பெரும் வைத்தியநாதன் ஆனார்.

தொடர்ந்தும், பாற்கடல் கடையப் பெற்றபோது காமதேனு, லஷ்மி, கற்பகதரு இவற்றின்பின் மகாவிஷ்ணு அவதாரமான 'பகவான தன்வந்திரி' அமிர்தகலசத்தை தாங்கியவராய் வெளிவந்தார். தேவர்க்கு அமுதளித்தபோது இராகு கேதுக்களும் சூரிய சந்திரர்க்கிடையே இருந்து அமிர்தம் பெற்று ஈஸ்வரபதம் பெற்று நவக்கிரகங்களுள் இடம்பெற்றனர். கருணையுள்ள தன்வந்திரி பகவான் பூலோக ஜீவராசிகள் உய்யும் பொருட்டு மானுடர், விலங்கு, தாவர, சங்கம ஜீவராசிகள் அத்தனையிலும் சேரும்வண்ணம் அமிர்தத்தைப் பூலோகத்தில் தெளித்தார்.
அதனால்தான் இயற்கையான தாவர, தாது, லோக, ஜீவவஸ்துக்கள் அனைத்திலும் மருத்துவாம்சத் (அமிர்தபாகம்) தன்மை பெற்றுள்ளது. எனவேதான் தன்வ்ந்தரிபகவானை ஆயுர்வேதத்தின் முதற்கடவுளாகக் கூறப்படுகின்றது.

'நமாமி தன்வந்திரீம் ஆதிதேவம்
சூராசுரைகி வந்தித பதபத்மம் லோகே
ஜரா ருக்பயம் மிருத்யு நாசம்
ததாரம் ஈசம் விவிதௌஷ தீனாம்'

அதாவது தேவர் அசுரர்களால் வணங்கப்பட்ட பாத கமலங்களை உடையவரும், லோகத்திலே மானிடர்க்குத் துன்பததைத்தரும் வயோதிபம், பிணி, பயம், அவமிருத்து இவற்றால் மரணம் சம்பவிக்காமல் காப்பரும், மூலிகைத் தாது சங்கமப் பொருடளெல்லாம் அமிர்தமெனும் மருந்தாக உள்ளவருமான தன்வந்திரி பகவானை வணங்குகிறேன்.
இவ்வாறு ஆயுர்வேதம் தெய்வீகத்தன்மை உள்ளதாக வரலாறுகளும், புராணங்களும் கூறுகின்றன. தேவர்களாயினும், ரிஷிகள், முனிவர், சித்தர்களாயினும் அவர்கள் முக்திப் பேறடைய உடல் எனும் கருவி (வாகனம்) உயிர் வாழ்விற்கு அவசியமாகின்றது. உடல் இல்லையேல் உயிர் வாழ, சாதனைகள் புரிய மோட்ச நிலையடைய வழியேது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே தான் உடல் அழியாது காக்க தேவர்களும் முனிவர்களும் வழிதேடினர்.

அதனையே திருமூர்,

'உடம் பாரழியில் உயிராழழிவர்,
திடம்பட மெஞ்ஞானம் தேடவும் மாட்டார்
உடம்பை முன்னர் அழுக்கென்று இருந்தேன்
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன'
என்கிறார்.

'உடம்பை வளர்க்க உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்'
என திருமந்திரமும் கூறுகின்றது.

***Dr.** இ. மங்களாம்பிகை (மங்களபதி)*

**Ariyabatta Bala Mandir Hindu School**
**Birthday Wishes for the month of October**

| | | |
|---|---|---|
| 3rd Oct | - | Lakshi Ganesharaja |
| 4th Oct | - | Sivanesan Senthuran |
| 6th Oct | - | Saaksha Chandrasegaran |
| 10th Oct | - | Ramcharan Ramanaharan |
| 12th Oct | - | Sudharshan Balasubramaniam |
| 14th Oct | - | Sujievan Kulendran |
| 15th Oct | - | Aksika Ponsegar |
| 18th Oct | - | Krishanth Kugadharan |
| 20th Oct | - | Gowtham Gunasekaram |
| 22nd Oct | - | Krithiga Dhakshayanie |
| 23rd Oct | - | Saathvika Krishnamoorthy |
| 25th Oct | - | Sivaranjan Sivanthilingam |
| 28th Oct | - | Sri Madangi Sri Satgurunadhan |
| 29th Oct | - | Praveen Raveendran |
| 30th Oct | - | Segar Sanjith |
| 31st Oct | - | Ramachandran Thivaharan |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி வழிபாடு

நம் பாவங்களைப் போக்கும். கல்வி, கலைமகளைப் பற்றிய பரந்த அறிவைக் கொடுக்கும். நாம் செய்யும் தொழில்களைச் சிறக்கச் செய்யும்.நமக்குச் செல்வத்தையும், சகல சௌபாக்கியங்களையும்; சுக வாழ்வையும் கொடுக்கும். மறுமையில் மோஷத்தைக் கொடுக்கும்.

எனவே, நாம் நவராத்திரியில் கொலு வைத்து ஸ்ரீ அம்பாளைப் பூஜித்து, விரதமிருந்து, வழிபட வேண்டும்.

குறுமுனி அகத்திய முனிவரும், நவராத்திரி வழிபாட்டின் சிறப்பைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

நவராத்திரியில் ஸ்ரீஇராஜ ராஜேஸ்வரி மூல தெய்வமாக விளங்குகிறார். இவர் ஸ்ரீ சக்கரத்தில் சிந்தாமணித் தீவில், இராஜ்ய பரிபாலணம் செய்யும் சிம்மாசனத்திலர் அமர்திருந்தார்.

கரும்பு வில்லைக் கையிலேந்தியிருக்கிறார். சிவசக்தி ஐக்கியமானவராகவும் விளங்குகிறார்.

ஸ்ரீ துர்க்கா, ஸ்ரீ லஷ்மி, ஸ்ரீசரஸ்வதிதேவி ஆகிய மூவரும் ஒருவராக, ஸ்ரீஇராஜராஜேஸ்வரியாக இருக்கிறார்.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்ள் ஸ்ரீதுர்க்கைக்கும், அடுத்த மூன்று நாட்கள் ஸ்ரீமஹாலஷ்மிக்கும், கடைசி மூன்று நாட்கள் ஸ்ரீ சரஸ்வதி தேவிக்கும் உரிய பூஜை நாட்களாகும். பத்தாவது நாள் விஜயதசமி ஆகும்.

இந்த நவராத்திரியில் பத்து நாட்களும் நாம் விரதத்தை அனுஷ்டித்துப் பூஜை செய்ய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

பஞ்ச பாண்டவர்களில் ஒருவரான அர்சுனன் அஞ்ஞானவாசம் முடித்த பிறகு, வன்னிமரப் பொந்தில் மறைத்து வைத்திருந்த தங்கள் ஆயுதங்களை வெளியே எடுத்து வைத்து, தேவியைப் பூஜித்த பிறகு, தசமியன்று மகாபாரதப் போரில் வென்று, தங்கள் இராஜ்ஜியத்தை அடைந்தார்களாம்.

ஆதனால், விஜயம் தரும் தசமி விஜயதசமி என்ற பெயரை அடைந்ததாம்..

ஆதனால்தான் நாமும், விஜயதசமி நாளன்று, நம் இல்லங்களில், குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்த்துப் படிக்க வைக்கிறோம். அன்று பெண் குழந்தைகளை, பாட்டு, நடன வகுப்புகளில் சேர்த்து விடுகிறோம். புரிய தொழில்களையும், வியாபாரத்தையும் ஆரம்பித்து ஈடுபடுகிறோம். நும் முயற்சிளில் முழு வெற்றி பெறுகிறோம்.

எனவே, நலம் நல்கும் நவராத்திரி வழிபாட்டை நாம் சிறப்பாகச் செய்து, ஸ்ரீ அம்பாளின் பரிபூரண அனுக்கிரகத்தையும், பேரருளையும் பெற்று இன்புற்று வாழ்வோமாக!

*தொகுப்பு:*
*வை சண்முகப்பிரியா*
*ஸ்ரீ பத்மாவதி இந்து சமயப் பாடசாலை*

பள்ளியிலிருந்து திரும்பிய பண்டு சிங் தனது தந்தையிடம் :

மகன் : அப்பா இன் னிக்கு ஸ்கூ ல்ல மட்தவங்க எல்லாம் ஸ்பெல்லிங் தப்பா சொல்ல, நான் மட்டும் கரெக்டா சொன் னேன் !

தந்தை : சபாஷ் . . . எல்லாம் நீ சர்தாரா இருப்பதால்தான் !

மகன் : கணக்கு கிளாஸ்ல எல்லாரும் 10 வரைக்கும்தான் சொன் ணாங்க, நான் 20 வரைக்கும் சொன் னேன் !

தந்தை : சபாஷ் . . . எல்லாம் நீ சர்தாரா இருப்பதால்தான் !

மகன் : இன் னிக்கு மெடிக்கல் எக்ஸாம் செ சாங்க . . . மட்தவங்களை விட நான் 2 மடங்கு உயரம் அதிகமா இருந்தேன் . நான் சர்தாரா இருப்பதால்தானே !

தந்தை : இல்லை மகனே ! இதுக்கு காரணம் உனக்கு 31 வயசுங்கறதுதான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் நெஞ்சம்.....

புலம்பெயர்வும் உயிரிழப்பும்
கேட்டு நெஞ்சம் இடிந்ததில்லை
புல்லுருவிப் பதரொன்றால்
பதறுதம்மா தமிழுள்ளம்.

தோல்வியிலும் துவளாத நெஞ்சுள்ளம்
சாவினிலும் எதிரியின் தலை கொண்ட
தமிழன் என்று சொல்லி ஏழு சாதியுண்டு
அது துரோகத்தில் துடிக்குதம்மா
நாதியற்று.

விடுதலை உணர்வுக்கு வித்தாகி
தியாக வேள்வியில் ஆகுதிக்கும்
அறமறவர் அனைவருக்கும்
குமுறுதம்மா புண்நெஞ்சம்.

சிறுமகன்கள் விலைப்படலாம்
தியகங்கள் கடையேறுமோ
மைந்தரவர் ஆகுதியில்
ஆறுதம்மா தமிழ்நெஞ்சம்.

செந்தூரன் (Y.L.S.D.P)

வெள்ளத்தால்
போகாத கை
வெந்தனலால் வேகாத
கை
கொள்ளத்தாள்
நினைவொழிய குறைவு
படாத கை
அன்பை, அறிவை,
ஆற்றலை,
ஆன்மீகத்தை
வழங்கி ஒரு
மனிதனை முழு
மனிதனாக்கிய கை
எங்கள் அறநெறி
கற்கை
*யோ. துவாரகா*

கவிதை வாசகர்களே பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றில் 20 வரிக்கு மேற்படாமல் கவிதை ஒன்றை அனுப்பி வைக்கலாம். சிறந்த கவிதைக்கு மூன்று மாத சங்கநாத சஞ்சிகை இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

தலைப்புகள்

*திருமணம்*
*நகை*

அனுப்ப வேண்டிய முகவரி:
*கவிஞர் களம்: சங்கநாதம் இல.*
*3 றிஜ்வே விளேஸ்,*
*கொழும்பு -04.*

### ஹட்ரிக்

இந்தியாவுக்கு ஹாட்ரிக்னா என் ன அர்ட்தம் சொல்லு ?

3 பந்துல 3 ரன் எடுக்கறதுதான் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தோ பரிதாபம் பழமொழிகள்.....

எமது முன்னோர்கள் எமது வாழ்க்கையின் தத்துவங்களை அழகிய பொருள் பதிந்த சொற் கூட்டங்களாக எமக்கு தந்து சென்றனர். ஆனால் நாம் அவற்றை திரித்து சின்னாபின்னமாக்கி விட்டோம். இன்று பழமொழிகள் எல்லாம் சிதைந்து பொருள் தெரியாமல் போலியாய் உள்ளன. நாம் மாதமொரு பழமொழியை மகிழ்வுடன் பார்ப்போம்.

'அறப்படிச்சு காடிப் பானைக்கு விழாதே' - இது இன்று எம்மிடையே முன் வைக்கப்படும் பழமொழி. அதிகப் பிரசங்கிகளுக்காக சொல்லப்படுவது. இது உண்மையிலேயே முன்பு எப்படி இருந்தது தெரியுமா?

'ஆற வடிச்ச முன் சோறு காடிப் பானைக்கு விழும்!'

அதாவது சோறு சமைக்கும் போது மேலதிக நீரை வடித்து வெளியே கழிவு நீருடன் வீசுவார்கள். இச் செயற்பாட்டின் போது அந்த மேலதிக நீருடன் ஓடி வரும் சில சோறும் சேர்ந்து (காடிப்பானையில்) கழிவு நீருடன் கலந்து பயனற்றதாக வீசப்படும்.

நாமும் எந்தவொரு செயற்பாட்டிலும் அவசரப்பட்டு பொருத்தமற்ற பயனற்ற செயற்பாடுகளை செய்ய முயச்சிப்போமாயின் சமுதாயத்தில் இருந்து தூக்கி வீசப்படுவோம் என்பதையே அழகாக எடுத்துச் சொல்லி உள்ளனர்.

இனி இப்படியே சொல்லிப் பழகுவோம். எப்படி 'ஆற வடிச்ச முன் சோறு காடிப்பானைக்குள் விழும்!.

*ஸ்ரீஸ்கந்தராஜா*
*ஆசிரியர்: ஸ்ரீ பொன்னம்பல வானேஸ்வரர் இந்து சைவ பாடசாலை*

TYPE SETTING &
GRAPHIC DESIGNS
SUN NETWORK
tEL : 0777 563 891

# நங்கூரக்கனவுகள்

புதுமைலோலன்

நாங்கள்
இந்தத் தேசத்தின்
கருமூலத்தின்
பிரித்தெடுக்கமுடியா
அணுக்கள்
கப்பல் கப்பல்களாக
சரக்குகளோடு சரக்குகளாய்
இறக்கப்பட்ட
அடிமை அணுக்கள்
தலைமன்னாரில்
எங்கள் கனவுகள்
நங்கூரமிடப்பட்டன
இப்படித்தான் சொன்னார்கள்
அங்கே வாருங்கள்
உங்கள் பாதங்கள்
பாலினால் கழுவப்படும்
வயிறுகள்
பஞ்சாமிர்தத்தினால் நிரப்பப்படும
கஞ்சியல்ல
புரியாணியே தருகிறோம்
நடந்தோம் !
கண்டி வரை நடந்தோம்
அரவம் தீண்டின
விலங்குகள் வேட்டையாடின
தொடர்ந்து நடந்தோம்
எங்கள் பின்னால்
இன்னும் நீண்ட ஊர்வலம்
எங்கள் எலும்புக் கூடுகளே
தொடர்ந்த பாதங்களின்
திசைகளாயின
நாங்கள் மூடர்களென்கிறாய்
முட்களை பூக்களாக்கியவர்கள்
மலைகளுக்கு
மகுடம் சூட்டியவர்கள்
இது குறளி வித்தையல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று விஞ்ஞான சாதனைகள்



விஞ்ஞானம், தொழில்நுட்பம் உள்ளிட்ட அனைத்து கலைகளிலும் இந்துப் பெரியார்கள் சிறந்து விளங்கினார்கள். இம்முறை சங்கநாதத்தில் இரசாயனம் பற்றிய விடயம் ஆராயப்பட உள்ளது.

பலவித இயற்கை மற்றும் இரசாயனக் கலவைகளைக் கலந்து துணிகளுக்குச் சாயம் போடும் கலை மிகவும் தொன்மையாது. ஸிந்து சமவெளி நாகரிகம் (கி.மு. 2500) என்று கூறப்படும் ஹரப்பா, மொகஞ்ஜதாரோ அகழ்வாராய்ச்சிகளில் கிடைக்கப்பட்ட மண்பாண்டங்கள், பாத்திரங்களை ஆய்வு செய்த அறிஞர்கள் பலவித ரசாயன முறைகளை அக்காலத்தினர் அறிந்திருந்தனர் என்று முடிவு செய்கின்றனர்.

அர்த்த சாஸ்திரம் (கி.மு.300) சகர ஸம்ஹிதை (கி.மு.500) சுஸ்ருத ஸம்ஹிதை (கி.மு.400) குறிப்பிடும் இரசாயன விஷயங்கள்: தங்கம், வெள்ளி, தாமிரம், ஈயம் ஆகியவற்றைச் சுத்தப் படுத்தும் முறை. வாசனைத் திரவியம், ஆல்கஹால் தயாரிப்பது: அமிலத்தின் உதவி கொண்டு அல்காலியை சமன்படுத்துவது: தாவரம், விலங்குகளிடமிருந்து எண்ணெய் எடுத்தல்: பல்வேறு விதமான நச்சுப் பொருட்கள்.

வாக்படரின் அஷ்டாங்க இருதயம் (கி.பி.650) மனித சரீரத்தில் உணவு ஜீரணமாவதின் ரசாயன மாற்றங்களைப் பற்றி விவரிக்கின்றது.

தஷசீலம் பிர்மௌண்ட என்ற இடத்தில் கிடைத்த கண்ணாடி மாதிரி மூலம் கி.மு. 600 ல் கண்ணாடி தயாரிப்பது பற்றிய விவரம் அறியப்பட்டது என (Melting. refining and clouring) உணரலாம்.

இரசாயனம் பற்றிய நூல்களும் ஆசிரியர்களும்

ரஸரத்னாகர : (நாகார்ஜுனர்), ரஸ ஹ்ருதய தந்துரம் (பிஷ கோவிந்த), ரஸஸார: (கோவிந்தாசர்ய), காக சண்டேச்வரீ மத தந்த்ரம் (காக சண்டேச்வர:), ரஸ ப்ரகாச ஸுதாகர: (யசோதர:), ரஸரத்த ஸமுச்சய: (வாக்பட:) ரஸேந்திர சிந்தனா (துண்டுகநாத:) ரஸேந்திர ஸார ஸங்க்ரஹ: (கோபால கிருஷ்ண பட்ட:), ரஸப்ரதீப: (ப்ராண நாத:), ரஸேந்திர சூடாமணி: (ஸோமதேவ:) இந்தப் பண்டைய கால நூல்களைப் பற்றியும், பண்டைய இரசாயன அறிவைப் பற்றியும் விவரமாக திரு. பி.சி.ரே அவர்களின் 'இந்திய இரசாயன வரலாறு' என்ற புத்தகத்தில் காணலாம்.



இரசாயனப் பொருட்கள்

மேலே குறிப்பிட்ட புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில இரசாயனப் பொருட்களின் பெயர்கள்:

அப்ரகம் (மைகா), ஸவர்ண காஷிகம் (Copper pyritis. CuFes2). ரோப்ய மாஷிகம் (iron pyritis). சபல: (Bistum). மயூர துத்தம் (Peacock ore, Bornaid CufeS4). கந்தகம் (Sulphur), ஸோமல: (Arsenic oxide. $As_2O_3$). மற்றும் மந:சிலா: (Arsenic Disulphate, $As_2S_2$)

ஆயுர்வேதம் கி.மு. 600 – கி.மு. 800 காலகட்டத்தில் பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்தது. அதற்கு உதவிபுரியும் விஞ்ஞானப் பிரிவாக ரஸாயன சாஸ்திரமும் வளர்ந்தது. மேலும் சுரங்கம், உலோக வார்ப்பு ஆகிய துறைகளுக்கும் இரசாயன அறிவு பெரிதும் பயன்பட்டது.

*தொகுப்பு:*
*காலைவாணி இரகுபதி*
*பொன்னம்பலவானேஸ்வரா*
*இந்து சமய பாடசாலை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நவீனத்தை நோக்கி...

வளைவுகளையும் வசீகரத்தையும் கொண்ட தமிழ் எழுத்துக்களும், தமிழ் சொற்களும் கண்களுக்கும் செவிகளுக்கும் இன்பத்தை தருவதென்னவோ உண்மைதான். ஆனால் தமிழனாய் அவதரித்த எத்தனை பேர் இதனை உணர்ந்திருக்கின்றோம் என்பது "?"

இலக்கணம், இலக்கியம், இதிகாசம், காப்பியம் என்ற பல ஆறுகளின் சங்கமமே தமிழ் எனும் பெருங்கடல், முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என முச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த சான்றோர் முதல் வள்ளுவன், பதினென் சித்தர்கள், கம்பன், பாரதி, பாரதிதாசன் என தொடர்ந்ததை நாம் அறிவோம். 'தன்னை இறைவன் படைத்தது தமிழ் செய்யுமாறே' எனக்கூறி மூவாயிரம் பாடல்களை தந்து சென்ற திருமூலர்....
பாலும் தேனும் பருப்பும் தருவேன் துங்கக்கரிமுகத்தை கோலம் செய் எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா என்ற தமிழ் மூதாட்டி......

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் தொல்காப்பியமாய் தந்து சென்ற தொல்காப்பியர்....... நவகவிதை நாயகனாய் மனதிற்குள் நிற்கும் முண்டாசு கவிஞர்..... இவர்களின் ஒவ்வொரு படைப்புக்களும் அற்புதமானவை, ஆழமான கருத்துடையவை, மருத்துவ குணங்களை மறைத்துக் கொண்டிருப்பவை. இவர்களும் இவர்களின் படைப்புக்களும் எமக்கு கிடைத்த பெரும் பொக்கிஷங்கள்.

இத்தகைய உயர்வான தமிழ் நவீனத்தை எவ்வாறு நோக்குகின்றது எனின்.....

கொஞ்சம் கொஞ்சமாய் மருவிவரும் தமிழ் சொற்களுக்குள் திசைச்சொற்கள் பெருகி வருகின்றதென்பது கண்கூடு. எமது ஆதிக்கமொழி வேறுமொழியாய் இருப்பதால் பரஸ்பரம் அதன் தாக்கம் எம்மை பாதிப்பது யதார்த்தமே.

தவிர்க்க முடியாத இந்த சந்தர்ப்பங்களில் தப்பிச்செல்ல முடியாதவர்களாய் அதை கடந்து சென்று உலகின் பல்வேறுபட்ட பாகங்களின் மூலை முடுக்குகளில் புகலிடம் தேடி நிற்கும் தமிழன், தன் மொழி வளர்ச்சிக்காய் அதன் பாதுகாப்பிற்காய் என்ன செய்ய போகின்றான்.

பிறமொழி கலப்பிற்குள் அமிழ்ந்து தன் தனித்துவத்தை இழந்து நிற்கும் தமிழ் தலைநிமிர ஒவ்வொரு தமிழனின் பங்களிப்பும் இன்றியமையாதது. புதிய நூற்றாண்டில் கால்பதித்து நவீனதுவத்தை நாடும் மனிதன் ஆங்கிலம் கலந்த தமிழை பெருமைக்குரிய விடயமாய் எண்ணுவதும் அதை பின்பற்றுவதும் வருத்தத்திற்குரிய ஒன்று.

தன் சுயமொழியில் கற்றாலேயொழிய உணர்வுபூர்வமாய் அனுபவித்து எதையும் கற்க இயலாது என்பது மறுப்பிற்கிடமற்ற கருத்து. எம் எதிர்கால சந்ததியினர் சுயமொழி மூல கல்வியை பெற ஊக்குவிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.
நவீனத்தை நோக்கும் எமது தமிழ் புதிய சமகால வளர்ச்சியை உள்வாங்கி பல புதிய கலைச்சொற்களை தமக்குள் உள்ளடக்கிக்கொண்டது வரவேற்கத்தக்கது. செல்நெறி கணனி, குழுமம், குவிமையம் போன்ற சொற்களை உதாரணம் காட்டலாம். தமிழ் இணையத்தளத்தில் தமிழ் ஆராய்ச்சிகள் புதிய கண்டுபிடிப்புகள் என்பன மகிழத்தக்கதான விடயங்கள்.

எனவே தமிழ்ததாய் தன்னை விஸ்தரிக்க நவீன தமிழன் தன்னை ஈடுபடுத்தவில்லை என கூறவும் முடியாதுள்ளது.
பண்டு முளைப்பதரிசியேயானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்'
எனும் ஒளவையின் மூதுரையை இங்கு நோக்கலாம்.
அதாவது உமிக்கு முன்னே முளைப்பது அரிசியேயானாலும் உமி நீங்கி போனால் அரிசி முளையாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையதொரு நிலையிலேதான் நாங்களும் தமிழ் வளர்ந்த பின்புதான் அதை விரும்புவோம், அதில் பற்றுவைப்போம், பாதுகாப்போம் என்றிருந்தால், தமிழர்கள் தமிழை காதலிக்கும் வரை அதன் வளர்ச்சி சாத்தியப்பாடற்றது.

தமிழின் நிலை உயர அதன் தொன்மையின் வன்மையை உலகில் நிலைநிறுத்த முயலவேண்டும். எனவே பாடசாலை மட்டம், ஆசிரிய மட்டம் நிறுவன மட்டம் இவைகளுக்கூடாக கொஞ்சம் கொஞ்சமாய் தமிழை தூய்மைப்படுத்த, செழுமைபடுத்த முனைவோம்.

நவீனத்தை நோக்கும் தமிழ் தன்
தனித்துவத்தை இழந்துவிடக்கூடாது.

*'சாவது நாமாக இருப்போம்*
*வாழ்வது தமிழாக இருக்கட்டும்'*

என்ற கலைஞர் மு. கருணாநிதியின் வாக்கு மெய்ப்பட வேண்டும்.

செல்வராஜா பிரமிளா
ஆசிரியர்
பத்மாவதி இந்து சமய பாடசாலை

1. தொண்டை வலி இருந்தால், கொ'சம் மிளகு, ஓமம், உப்புஆகிய மூன் றையும் சேர்ட்து வாயில் போட்டு மென் றால்தொண்டை வலி குணமாகும்.

2. மிளகைப் பொடி செய்து, சிறிது உப்பு சேர்ட்து சூடாக்கி சிறிதுநெய்யில் கலந்து கொண்டு சாப்பிட்டால் வயிற் று உப்புசம்,பசியின் மை போன் றவை உடனே குணமாகும்.

3.பசியில்லாமலிருந்தால், ஒரு ஸ்பூன் மிளகை வறுட்துப் பொடிசெய்து கைப்பிடியளவு துளசி இலையைப் போட்டுக் கொதிக்க வைட்து, சூடு ஆறியவுடன் தேனில் கலந்து குடிட்தால் சரியாகும்.

# நங்கூரக்கனவுகள்

புதுமைலோலன்

நாங்கள்
இந்தத் தேசத்தின்
கருமூலத்தின்
பிரித்தெடுக்கமுடியா
அணுக்கள்
கப்பல் கப்பல்களாக
சரக்குகளோடு சரக்குகளாய்
இறக்கப்பட்ட
அடிமை அணுக்கள்
தலைமன்னாரில்
எங்கள் கனவுகள்
நங்கூரமிடப்பட்டன
இப்படித்தான் சொன்னார்கள்
அங்கே வாருங்கள்
உங்கள் பாதங்கள்
பாலினால் கழுவப்படும்
வயிறுகள்
பஞ்சாமிர்தத்தினால் நிரப்பப்படும்
கஞ்சியல்ல
புரியாணியே தருகிறோம்
நடந்தோம் !
கண்டி வரை நடந்தோம்
அரவம் தீண்டின
விலங்குகள் வேட்டையாடின
தொடர்ந்து நடந்தோம்
எங்கள் பின்னால்
இன்னும் நீண்ட ஊர்வலம்
எங்கள் எலும்புக் கூடுகளே
தொடர்ந்த பாதங்களின்
திசைகளாயின
நாங்கள் மூடர்களென்கிறாய்
முட்களை பூக்களாக்கியவர்கள்
மலைகளுக்கு
மகுடம் சூட்டியவர்கள்
இது குறளி வித்தையல்ல
எங்கள் குருதியின்

தொடர்ச்சி 37ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருவும் தமிழும்

தமிழ் மொழியில் இன்று நாம் பயன்படுத்தும் சொற்களில் பல மருவி வந்தவையாகவே உள்ளன. இச்சொற்கள் எவ்வாறு இருந்து எவ்வாறு மருவி உள்ளது என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். எனவே இன்று ஒரு சொல்லைப் பார்ப்போம்.

'பரிட்சையம்' என்பது நாம் அடிக்கடி சொல்கின்றோம். இது 'பரிசயம்' என்பதன் தழுவல் அதாவது மருவு' என்ன இது இப்படி சும்மா சொல்லி விட்டால் போதுமா? இதற்கு ஆதாரம் வேண்டாமா? நீங்கள் கேட்பது எனக்கு விளங்குகின்றது. இதோ சங்கத் தமிழ் பாடல் ஒன்று.

'வீறுசால் மன்னன் விரிதாம வெண்குடையை
பாற எறிகின்ற பரிசயத்தால் செங்கண்
மாக் கோதை சின வெண் கழியானை
திங்கள் மேல் நீட்டுமாம் தன்கை'

பார்த்தீர்களா மேலே குறிப்பிட்ட பாடலை பரிசயம் என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. அதாவது இதில் வரும் யானைக்கு இந்தச் செயற்பாடு நல்ல பரிசயமாம்.


சரி இந்தப்பாடல் அப்படி என்னதான் பரிசயம் என்கின்றது.

கோதை – சோழநாட்டு மன்னர்களின் சிறப்பு பெயர் வீச்சால் மன்னன் - வெற்றி பொருந்திய மன்னம்.
சினவென் கழியானை – கோபம் கொண்ட மதம் பிடித்த யானை.
திங்கள் மேல் நீட்டுமாம் கை – சந்திரனைப் பிடிக்க தன் கையாகிய தும்பிக்கையை நீட்டுகின்றது.

அதாவது சேரநாட்டு மன்னன் ஒரு பெரிய பட்டத்து யானையை கொண்டிருந்தான், யுத்தத்துக்குச் செல்லும் போது இந்த யானை படைகளுக்கு முன்னால் செல்லும் எதிரிப்படை வந்ததும் அதில் உள்ள எதிரி நாட்டு அரசனின் வெண்கொற்றைக் குடையைப் பறித்து எறிந்து எதிரிப்படைகளை தன் கால்களால் உதைத்து அழித்து விடும். இதனால் இம்மன்னனுக்கு சென்ற இடமெல்லாம் வெற்றி. இப்போது எதிரிகள் இல்லாமையால் யுத்தம் இல்லை. யானைக்கும் வேலை இல்லை. பௌர்ணமி இரவு முழுச் சந்திரன் ஆகாயத்திலே தோன்ற அது எதிரி நாட்டு மன்னனின் குடை என்று நினைத்து அதைப் பிடிப்பதற்காக தன்கையாகிய தும்பிக்கையை நீட்டுகின்றதாம் இது முன்பு குடைகளைப் பறித்த பரிசயத்தால்.

எனவே பரீட்சையம் என்பது பரிசயத்தில் இருந்து மருவியது யாரும் இதை பரிசயம் என்று குறிப்பிட்டால் பிழை பிடிக்க முனையாது இருப்போமாக.

*ஸ்ரீஸ்கந்தராஜா*
*ஆசிரியர் - ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வர இந்து சமயப் பாடசாலை*



எத்தனை முகங்கள் ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மாதப் பெரியார்

**பவள விழா நாயகனான**
**சிவாச்சார்ய திலகம்**
**சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாத குருக்கள்**

இலங்கையில் சைவ வாழ்வு வாழ்ந்து கொண்டு தமது ஆகம வைதீகக்கிரியைகளால் சைவ சமயத்தை வளர்த்துக் கொண்டு வரும் பவள விழா நாயகனான சிவாச்சார்ய திலகம் சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாத குருக்கள் அவர்களைப் பற்றி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் சங்கநாதம் பெருமிதம் அடைகின்றது. ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னப்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சார்யராகிய ஐயா அவர்கள் 1949ம் வருடம் முதல் இற்றைக்கு 56 வருடங்களாக தன்னை தேவஸ்தான பணியில் அர்ப்பணித்து வருகின்றார்.

1969ம் ஆண்டு முதல் இன்று வரை ஆலயத்தில் நடைபெற்ற நான்கு கும்பாபிஷேகங்களினதும் ஆகமக்கிரியைகளிலும் பங்கேற்றுள்ளமை அம்சமாகும். இலங்கயில் முதன் முதலாக ஸ்ரீ ருத்ர மஹாயாகம் 1988-06-04 முதல் 1988-06-15 வரை ஸ்ரீ பொன்னம்பலவானேஷ்வரா தேவஸ்தானத்தில் நடைபெற்ற போது பிரதம சிவாச்சாரியாக அதனை முன்னின்று வழிநடத்திய பெருமை இவரை சாரும்.அத்துடன் இவர் சமயத்தின் நலன் கருதி பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். அந்நூல்களாவன (1) சந்தியாவந்தனம் - கிரந்தம் / தமிழ், (2) சிவபூஜை - கிரந்தம் / தமிழ்(3) அர்ச்சனா தர்சம் - கிரந்தம் / தமிழ் முதலியன.

இவர் பல நல்ல சமூகப்பணிகளுக்காகவும் தன்னை அர்ப்பணித்துள்ளார். பல அமைச்சுக்களுக்கும், ஸ்தாபனங்களுக்கும் ஆலோசகராக பணியாற்றுவதுடன் பல சமுதாய நோக்கு கொண்ட அமைப்புகளில் உறுப்பினராகவும் திகழ்கின்றார். இந்து சமய, இந்து கலாச்சார, மற்றும் கல்வி உயர்கல்வி அமைச்சுகளின் ஆலோசகராக பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். அது மட்டுமன்றி அகில இலங்கை சிவப் பிராமண சங்கத்தின் ஸ்தாபகராகிய இவர் தற்பொழுது மேற்படி சங்கத்தின் 'சிவாசார்யர்' பரீட்சைக் குழுத்தலைவராகவும் உள்ளார். அத்துடன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆலோசகராகவும் சேவையாற்றுகின்றார்.

இவ்வாறு நாம் இலங்கை வாழ் இந்துக்களின் அரும் பெரும் சொத்தாக நாம் போற்றி பெருமைப்பட வேண்டிய சிவஸ்ரீ.சி. குஞ்சிதபாதக் குருக்கள் ஐயா அவர்கள் பன்னெடுகாலம் வாழ்ந்திருந்து நம் சமுதாயத்திற்கு மேலும் பல சேவைகளை ஆற்றி தம் துணைவியாராகிய ஸ்ரீமதி சாந்தநாயகி அம்மாளுடன் நல்லறம் வாழ ஸ்ரீ பொன்னப்பல வானேஸ்வரர், ஈழத்து சிதம்பரேஸ்வர் சுவாமிகளின் திருப்பாதங்களை வணங்குகின்றோம்.

*பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்*
*ஸ்ரீ பொன்னப்பல வானேஸ்வர இந்து சமய பாடசாலை*

### கர்ப்பூரம்

கர்ப்பூரம் குளிர்ச்சியானது; காமம் பெருக்கிச் செய்கையுடையது. இது கண்களுக்கு நல்லது. It is cutting (Lekhana) and light (Laghu). இது இன் பமானது; இனிப்பும் கசப்புமுடையது; கபட்டையும், பிட்டத்தையும், விஷட்டையும் கண்டிக்கிறது. இது, தாகம், உடலெரிவு, நாச்சுவையின் மை அல்லது சுவை மாறல், கொழுப்பு, துர்நாற் றட்டை மாற் றுவதற் கும் உபயோகப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கநாதம் குறுக்கெழுத்துப் போட்டி
## இல: 22

நீங்களும் இப்போட்டியில் பங்பற்ற விரும்பினால் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

மேலே தரப்பட்டுள்ள கூப்பனை பூர்த்தி செய்து அதனை வெட்டி தபால் அட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பவேண்டியது மட்டும்தான். வெற்றி பெற்ற முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசு வழங்கப்படும்.
நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

சங்கநாதம் குறுக்கெழுத்துப் போட்டி 22
இல: 03 றிஜ்வே பிளேஸ்
கொழும்ப – 04.

வெற்றி பெறும் மூன்று வெற்றியாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசில்களை வழங்குவதற்கு முன்வந்த வெள்ளவத்தை ஸ்ரீ விஜயா வீதியைச் சேர்ந்த திரு. ஐ. வேலாயுதம் அவர்களுக்கு எங்களுடைய நன்றிகள்.

<u>மேல் இருந்து கீழ்</u>

(1) குந்தி தேவியாரின் புதல்வர்களில் ஒருவர்
(2) பரதனின் தாயாரின் பெயர்
(4) குந்தி தேவியாரின் புதல்வர்களில் ஒருவர்
(5) குரு வம்சத்தில் பிறந்த சந்தனு மன்னனுக்கும், வானுலக கங்கை கங்காதேவிக்கும் பிறந்தவர்.
(6) அரிச்சந்திரனை பொய்சொல்ல முயற்சித்த மனிவரின் பெயர்
(7) பிரகலாதனின் தந்தையின் பெயர்
(10)இராவணன் இலங்கையில் சீதையை சிறைவைத்திருந்த இடத்தின் பெயர் (குழும்பி உள்ளது)

<u>இடமிருந்து வலம்</u>

(2) இராவணனின் தங்கையின் பெயர்
(4) இராவணனின் தம்பியின் பெயர்
(7) இராமனுடன் காட்டுக்கு சென்ற ஒருவர்
(8) இராமனின் தந்தையின் பெயர் (குழும்பி உள்ளது)
(9) தசரதன் என்ற மன்னர் அரசாண்டு வந்த நாடு

கட்டங்கள் 25ம் பக்கத்தில் ....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Wisdom Has A Touch Of Gray

Wisdom has a touch of gray
A wrinkle in a flash of thought far away
The years etch their presence
As man writes his life in experience
The fancies of yester-years
ade as time's tapestry wears

A sunbeam smiles knowingly
Of by-gone dreams solemn and silly
The moonlight fairies move away
As man's blood loses its jumpy ways
Men unlike the beast and birds

Lean upon their offsprings fond
Who gallop around until their veins are staled
And settle to move ahead the lineage
That inevitably loses itself in the same maze
Through funful living and wayward ways
The warp and woof of life
Is over-spun by a myriad wanton inter-connections
Roses and jasmines keep on coming
Reminding that time is still
Only man is revolving
In frenzy with thought overfilled
Nature too is revolving
Presenting the things of yester years
As freshly bred now and new
A trillion hues and views
Revolving man
Revolving Nature
The manifold and myriad the same
The old returning as new
A hundred times over and over
A marvelous merry-go-round
Life is
And Great Teachers come out to point out just this
That all is one and one is all
Despite the thrill and thrall

***Kumaraluxmi***
***Kumarasinkam (BSc.(Econ) London***

நங்கூரக்கனவுகள்....
குறியீடுகள்
நாங்கள் நாட்டிய
ரபர் கன்றுகள்
முகில்களைத் தொடுகின்றன
எங்கள் வாழ்க்கை மட்டும்
இன்னும் இன்னும்
அதே லயங்களில்தான்
இந்த லயங்கள்
எங்கள் தேவாலயங்கள்
உங்களுக்கெல்லாம்
ஆறடியென்பது
மரணத்தின் பின்னர்தான்
எங்களுக்கோ
எட்டடிதான்
ஆனால்ஏடு
தொடங்கியதிலிருந்து நாங்கள்
கொடுத்ததெல்லாம்
தேசியத்தின் அடையாளம்
தேசத்தின் மூலதனம்
நீ இன்னும் கொடுப்பதெல்லாம்
தேயிலைச் செடிக்குள்
சிறைக்கனவுகள்
இலங்கைக் கடவுச்சீட்டு
அரசாங்கத்தின்
துருப்புச்சீட்டு
தேசியம் என்பது
எங்களுக்கெல்லாம்
தேகத்தில் ஆடைமாதிரி
அடிக்கடி இங்கே
அழுக்காகிப் போகிறது
காடுதான் வாழ்க்கைமாதிரி
மத்திக்குப்போயும் அதைத்தான்
வெட்டினோம் வடக்கிற்குப் போயும்
கிடைத்தபரிசு காட்டுக்கத்தி
மொத்தத்தில் என்ன
நாங்கள் தற்கால காட்டுவாசியா?

*45ம் பக்கம்....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *கண்ணனும் கண்ணாடியும் - குட்டிக்கதை*



ஒரு சமயம் துவாரகையில் கண்ணபிரானின் திருச்சபைக்கு ஓவியன் ஒருவன் வந்தான். அவன் கண்ணபிரானிடம், 'சுவாமி தங்களின் திரு உருவத்தை வரைந்து காட்டுகிறேன். ஒரு வாரம் அவகாசம் தாருங்கள்' என்று கேலியுடன் கூறினான். உலகிலேயே 'தான்' சிறந்த ஓவியன் என்று கர்வம் அவனுக்கு.

ஒரு வாரத்தில் அவனால் கண்ணனின் திரு உருவத்தை சரியாக வரைய முடியவில்லை. பலமுறை முயற்சி செய்தும் தோல்வியே அடைந்தான்,

இறுதியாக பயந்து துவாரகையை விட்டே ஓடி விட எண்ணம் கொண்டான்.

வழியில் நாரதரைக் கண்டான். நாரதரும் அவனைப் பார்த்து 'ஏன் அப்பா மிகவும் வருத்தமாக இருக்கிறாய்' என்று கேட்டார்.

அவன் நடந்ததை நாரதரிடம் கூறினான். இதைக் கேட்ட நாரதர், 'நான் ஓர் ரகசியம் சொல்கிறேன், அதன்படி நடந்தால் நிச்சயம் வெற்றி உனக்குத்தான்' என்று சொல்லி ஓவியனின் காதில் ஏதோ சொன்னார். உடனே துவாரகைக்குத் திரும்பினான்.

மறுநாள் ஒரு பொருளைத் துணியால் மூடிக்கொண்டு கண்ணனின் திருச்சபைக்கு வந்தான் ஓவியன். அவன் கண்ணபிரனிடம் 'சுவாமி இந்த முறை தாங்கள் என்னை ஏமாற்ற முடியாது. தங்கள் உருவத்தை எப்படி மாற்றினாலும் அப்படியேதான் இருப்பீர்கள்?' என்று கூறித் துணியை எடுத்தான். என்ன ஆச்சரியம்! கண்ணபிரானின் முகம் அப்படியே இருந்தது. அது என்ன தெரியுமா? ஓர் முகம் பார்க்கும் கண்ணாடி.

பிறகு அந்த ஓவியன் கண்ணப்பிரானைப் பார்த்து 'என்னை மன்னித்து விடுங்கள்! நான்தான் உலகிலேயே சிறந்த ஓவியன் என்று கர்வம் அடைந்தேன். கர்வம் அழிந்து – நாரத முனிவர் உபதேசம் பெற்றேன். பிறகுதான் புரிந்தது தங்களுக்கு ஒரு உருவமில்லை – எல்லா உருவமும் தங்கள் உருவம்தான் என்று அறிந்தேன்' என்றான். ஸ்ரீ கண்ணப்பிரான் அவனை ஆசீர்வாம் செய்தார். எனவே, நாம் நம் மனத்தை கண்ணாடி போல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

அன்பினாலும், பக்தியினாலும் கண்ணாடியை போல் சுத்தமாக வைத்திருந்தால் பகவான் நம் இதயத்தில் காட்சி தருவார்.

வை. ரேணுகா
பத்மாவதி இந்து சமய பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நிலை இவர்களுக்கு இனிப்பானது

இன்று இலங்கையில் நிலவிவரும் யுத்தமா? சமாதானமா? என்னும் நிலை மேற்கத்திய நாடுகளில் புலம் பெயர்ந்து வசிக்கும் எம்மவர்களுக்கு எல்லா வகையிலும் மிக வசதியாகவே உள்ளது. ஆரம்பத்தில் நிரந்தர வதிவிட உரிமை பெறாத பலர் திருப்பி அனுப்பப்பட்டதும் உண்டு. சிலருக்கு நீதிமன்றத்தில் மிக மிக விரைவாக வழக்குகள் தாக்குதல் செய்யப்பட்டது. இது எல்லாம் சமாதனப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட போது நடைபெற்றது. ஆனால் இன்று நிலமை தலைகீழ் நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்துக்காக கேள்விக்குறி, இடம் பெயர்ந்து வாழும் எம்மவரிடையே கொண்டாட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. திருப்பி அனுப்பப்பட்ட ஒரு சிலரும் மீண்டும் விண்ணப்பித்து வெற்றி பெற்றுள்ளனர். அதுமட்டுமல்ல தமது சொந்தபந்தங்களைப் பார்ப்பதற்கும் வீடுவளவுகளை புனரமைப்பதற்கும் இதுதான் சந்தர்ப்பம், அது மட்டுமா, திருமணச்சந்தை நிலமையும் நல்ல சூடாக உள்ளது. எனவே சீர்குலைவது போன்றுள்ள சமாதானம் சிலருக்கென்ன பலருக்கும் மகிழ்ச்சியையே கொடுக்கும்.

அண்மையில் செய்யப்பட்ட முறை சாரா ஆய்வு ஒன்றில் பெரும்பாண்மை இல்லாதவர்களை விட சிறுபாண்மை இனத்தவர்கள் அதிகமாக சமாதானத்தை விரும்பவில்லை, என்பதை எடுத்துக் காட்டியது.

*ஸ்ரீஸ்கந்தராஜா*

## ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான ஸ்ரீ பத்மாவதி இந்து சமய பாடசாலை ஆசிரியர்கள்.

வை. காந்தீபன்
கே. சந்தியகுமாரி
சாந்தினி மாணிக்கவாசகக் குருக்கள்
ந. சுவர்ணா
வை. ரேணுகா
வை. சண்முகப்பிரியா
ந. உதயா
கோ. சுசிலாதேவி
செ. கவிதா
இ. பிரசாந்தி
ஜெ. நிஷாந்தி
பா. கயல்விழி
என். விஸ்வநாதன்
எஸ். பிரமிலா
ரம்யா
லோகதர்ஷினி
பி. இந்திக்கா
ஜெ. சுகந்தன்
பெ. சந்திரகுமாரன்

இந்துக்கள் ஒன்று சேர்வது கஷ்டம், ஒனறு சேர்ந்தால் ஒன்றாக சந்திப்பது கஷ்டம், அவ்வாறு ஒன்றாக சந்தித்தால், ஒன்றாக சேர்ந்து நடப்பது கஷ்டம். ஆனால் இப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இணைந்து செயற்படுகிறார்கள். அவர்களது வாழ்க்கை வளம் பெற வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ பக்தியுடன் சமூக தொண்டாற்ற வாருங்கள் இளைஞர்கட்கும் யுகதிகட்கும் ஒரு அன்பான அழைப்பு

கொழும்பை வசிப்பிடமாக கொண்டவர்கள் பம்பலப்பிட்டிய, மட்டக்குளிய, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளிலுள்ள இந்து சமய பாடசாலைகளில் தொண்டாற்றுமாறு அன்பாக வேண்டப்படுகிறீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு:-

V. Damayanthy - 0777-563634 (Colombo – 04)
T. Anantharavi - 0777-048547 (Colombo – 04)
S. Mayuran - 0777-737384 (Kotahena)
V. Kantheepan - 0714606052 (Mattakkuliya)

**365**வது நாளை எட்டிப்பிடிக்கும் ஸ்ரீ பத்மாவதி இந்து சமயப் பாடசாலை.

ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான ஏற்பாட்டில் ஸ்ரீ பத்மாவதி இந்து சமய வகுப்புக்கள் 31-10-2003 வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணியளவில் முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான அறங்காவளர் திரு. துரைசாமி செட்டியார் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய வழிநடத்தலினாலும், ஆலோசனையினாலும் சிறப்பாக இயங்கிக்கொண்டு ஓராண்டு நிறைவை

**பாராட்டுகின்றோம்**

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தின் அங்கத்தினரும், யோகாசன பயிற்றுவிப்பாளருமாக இருந்த கலைச்செல்வன் வைத்திய கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளார். அவருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான
## புரட்டாதி மாத பூஜை விபரங்கள்

| | | |
|---|---|---|
| 01/10/2004 | வெள்ளிக்கிழமை | மஹாபரணி |
| 02/10/2004 | சனிக்கிழமை | 3ம் புரட்டாதிச் சனி, கார்த்திகை விரதம், சங்கடாகதி சதுர்த்தி |
| 09/10/2004 | சனிக்கிழமை | 4ம் புரட்டாதிச் சனி |
| 10/10/2004 | ஞாயிற்றுக்கிழமை | ஏகாதசி விரதம் |
| 13/10/2004 | புதன்கிழமை | அமாவாசை, மஹாளயபஷ முடிவு |
| 14/10/2004 | வியாழக்கிழமை | நவராத்திரி ஆரம்பம் |
| 16/10/2004 | சனிக்கிழமை | 5ம் புரட்டாதிச் சனி |
| 17/10/2004 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி மாதப் பிறப்பு, சதுர்த்தி, விளக்குபூஜை |
| 19/10/2004 | செவ்வாய்கிழமை | சஷ்டி விரதம் |
| 22/10/2004 | வெள்ளிக்கிழமை | மஹா நவமி – ஆயுத பூஜை |
| 23/10/2004 | சனிக்கிழமை | விஜயதசமி, வித்தியாரம்பம், கேதார கௌரி விரதம் |
| 24/10/2004 | ஞாயிற்றுக்கிழமை | ஏகாதசி |
| 27/10/2004 | புதன்கிழமை | பௌர்ணமி |
| 29/10/2004 | வெள்ளிக்கிழமை | கார்த்திகை |

### சனாதன தர்மயுவ விழிப்புணர்ச்சிக் கழகத்தின் நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| திருக்குறள் விளக்கவுரை | – | திரு. கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஞாயிறு காலை 7 – 8.30 |
| சைவசித்தாந்த விளக்கவுரை | - | சனி காலை 7.00 – 8.30 |
| யோகாசனப் பயிற்சி | - | தினமும் காலை 6.00 - 7.00 |
| சிறுவர்களுக்கு | | செவ்வாய்,வியாழன் 5.30 - 6.30 |

கழக தலைமையகம்
இல. 3 றிஜ்வே பிளேஸ்
கொழும்பு – 04.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு ஸ்ரீ பத்மாவதி இந்து சமயப் பாடசாலையின் சமூக சமய நிகழ்வுகள்.

இலங்கையின் பாரம்பரியம்மிக்க கலைக்குடும்பதிலுள்ள புகழ்மிக்க நடன ஆசிரியை திருமதி. பிரகதாம்பாள் தில்லைநடராஜா அவர்களின் நெறியாள்கையில் பிரதி சனிக்கிழமை தோறும் பரதநாட்டிய வகுப்புக்கள் நடைபெறுகிறது. ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆரோக்கியமாக வாழ விரும்புகின்றீர்களா?
மட்டக்குளியில் யோகாசன வகுப்புகள்



மட்டக்குளியில் வசிக்கும் மக்களின் நன்மை கருதி ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் வெள்ளி, சனி ஆகிய இரு நாட்களிலும் மாலை மணி முதல் யோகாசன வகுப்புகள் யோசன பயிற்சிவிப்பாளர் திரு. ஆனந்தரவியினால் கற்பிக்க படுகிறது. ஆசனம் மூச்சுப் பயிற்சிகள், தியானம், சாந்தி ஆசனம் என்பவை இப் பயிற்சியின் போது கற்பிக்கப்படுகிறது. நேரத்தை ஆரோக்கியமாக்க விரும்புபவர்கள் இவ் வகுப்புளில் கலந்துகொள்ளாலம்.

மேலதிக விபரங்கள்:-
திரு. ஆனந்தரவி – 0777 048547


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக சுற்றுலா 03-10-2004.

முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான மாணவர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, 03-10-2004 அன்று சுற்றுலா ஒன்றுக்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

மேலதிக விபரங்களுக்கு:- எ. காந்திபன் 0714-606052
(பொறுப்பாசிரியர்)

ஸ்ரீ வெங்டேஸ்வர மஹா விஷ்ணு தேவஸ்தான
ஸ்ரீ பத்மாவதி இந்து சமய பாடசாலை மாணவ
மாணவிகளின் பிறந்தநாள்


**October**

| | |
|---|---|
| நித்தியகலா செல்வராஜ் | 08 Oct 1999 |
| கனிஸ்கர் அங்கமுத்து | 11 Oct 1999 |
| லக்ஷ்மிதா மகேந்திரன் | 25 Oct 1999 |
| துசாந்தன் கேசவன் | 18 Oct 1999 |
| தினேஸ் கணபதி | 13 Oct 1998 |
| பவித்திரா திருமாறன் | 18 Oct 1996 |
| சாம்பவி தியாலிங்கம் | 16 Oct 1997 |
| C. மஞ்சுளா | 17 Oct 1995 |
| டினேசிகா திகராஜ் | 18 Oct 1995 |
| வனோஜ்குமார் முத்துக்குமார் | 23 Oct 1994 |
| யசிந்தன் சச்சிதானந்தன் | 02 Oct 1992 |
| அஷ்யபூ விஜயகுமார் | 15 Oct 1992 |
| ஹரிதர்ஷன் கதிரேசன் | 14 Oct 1991 |

ஸ்ரீ பத்மாவதி இந்த சமயப் பாடசாலை வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஸ்ரீ வரதராஜா சிவாச்சாரியார் அவர்களுக்கும் கிரிதர சர்மா அவர்களுக்கும் எங்களுடைய நன்றிகள். அத்துடன் A. கிருஷ்ணா, சிவயோகராஸா, வசந்தகுமார், சுப்பிரமணியம், நாகராஜன், S. விக்ரம் ஆகிய ஆலய ஊழியர்களுக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் தங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொழும்பு முகத்துவாரம் அருள்மிகு ஸ்ரீ பூமிநீளா பத்மாவதி சமேத ஸ்ரீ வெங்கடேஸ்வரர் மஹா விஷ்ணு தேவஸ்தான பிரம்மோற்சவ பெருவிழா.**



சொர்ண பூமி, என பல திருப்பதிகங்களில் பாடல் பெற்ற ஸ்தலங்களை தன்னகத்தே கொண்ட இலங்கையின் தலைநகராக விளங்கும் கொழும்பு மாநகரின் வடபால் கங்கையும் கடலும் சங்கமிக்கும் இடமாகிய முகத்துவாரம் என்ற பகுதியில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ பூமி நீளா பத்மாவதி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு சுவாமிக்கு நிகழும் மங்களகரமான தாரண வருட ஆவணித்திங்கள் 31ம் நாள் வியாழக்கிழமை (16-09-2004) காலை 9.00 மணிக்கு துவஜா ரோகணத்துடன் (கருடக்கொடியேற்றல்) ஆரம்பமாகி புரட்டாதி திங்கள் 7ம் நாள் (23-09-2004) வியாழக்கிழமை காலை 8.04 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறும். மாலை 7.30 மணிக்கு துவஜா அவரோகணத்துடன் விழா இனிதே நிறைவுறும். மறு நாள் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மஹா சுதர்சன ஹோமம் நடை பெறும். தினமும் காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் உற்சவர் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹா விஷ்ணு பெருமாள் தசாவதார அலங்காரங்களில் காட்சியளிப்பார். இவ்விழாவில் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருளை பெறுமாறு அன்புடன் அழைக்கிறார்கள் ஆலய அறங்காவலர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நங்கூரக் கனவுகள்.....(தொடர்ச்சி)*

அட்டை இப்போதெல்லாம்
கடிப்பதேயில்லை
எங்கள் குருதியை
இன்னும் நீங்கள்
பானமாய்ப் பருகி
பருத்து நிற்பதால்
எங்கள் முதுகுகள்
கூனிய பொழுதுதான்
நீங்கள் எழுந்தீர்கள்
நீ குடிப்பது வெறும்
தேயிலைச் சாயமல்ல
எங்கள் தேகத்தின்
குருதி வியர்வையின்
எச்சங்கள்
பாணனின் வீணை
இன்னும் மீட்பதெல்லாம்
வடக்கத்தையான்
வந்தேறுகுடி
இல்லையேல்
இந்தியக்காரன்
இன்னும் கொஞ்சம் மேலே போய்
வயிற்றுக்குத்தை நம்பலாம்
என்றும் பேதம்
எங்கள் தேசத்தின்
கின்னஸ் புத்தகத்தில்
பதியப்படாத அபூர்வங்கள்.

- புதுமைலோலன்-

## பெருமைப்படுகிறோம்





சுங்த்திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் உறுப்பினரான திரு. திருமதி அருளானந்தம் அவர்களின் இரு புதல்விகளான ஆனந்தி அருளானந்தம், அருந்ததி அருளானந்தம் ஆகியோர் தமது மருத்துவப்பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளனர். சங்கநாதம் சார்பில் அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## FESTIVALS

The bright half of the month Bhadrapad is full of festivals. The third day of the fortnight is Hartaarlika Teej, the fourth one Ganesh Chaturthi, the fifth one Rushi Panchami, eighth day Radha Ashtami, the eleventh dy Padmaa Ekaadashi, twelfth day Vaaman Dwadashi and fourteenth day Anant Chaturdashee.

**Ganesh Chaturthi**

One of the most popular of Hindu festivals, is the birthday of Lord Ganesha. It falls on 18th September this year. The festival is observed throughout Bharat, as well as by devoted Hindus in all parts of the world. Clay figures of the Deity are made, which after being worshipped for ten days, are immersed into water. Ganesha is worshipped first in any prayers. His names are repeated first before any kind of worship is begun. Started by Chhattrapati Shivaji, the great Maratha ruler, to disseminate culture and nationalism, the festival was given a new impetus by Lokmanya Bal Gangadhar Tilak to spread the message of freedom struggle and to defy the British who had banned public assemblies.

**Radhaa Ashtamee**

The birthday of Shri Radha the consort of Lord Krishna, falls on the 21st September this year. Lord Vishnu, sleeping on the bed of Sheshanaag, changes side on **Padma Ekaadashee.** The day falls on 24th September this year.

**Anant Chaturdashi**

Falls on 27th September this year. It is the day of theimmersion of Ganpati. On this day some people observe a fast in honor of Vishnu, which if kept for 14 years is supposed to bring wealth. On this day, the festival of Ganpati comes to an end, the installed Murti's of Lord Ganpati are taken to a lake, river or a sea in great processions to be immersed in the waters.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச புலனாய்வு

மார்ச் மாதம் 17 ம் திகதி புதன்கிழமை பாகிஸ்தானின் மேற்குப்பகுதியல் அமைதியான கிராமம்

உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகின்றன பாகிஸ்தானின் இராணுவம் ஒரு விவசாய கிராமத்தை சுற்றிவளைத்துள்ளது. முதலில் வெளியான தகவலின் அடிப்படையில் கசிந்த செய்தி இது தான் குறிப்பிட்ட அந்த விவசாய கிராமத்தில் உள்ள பண்ணை வீட்டில் மறைந்திருந்த அல் கைடாவின் முக்கிய புள்ளி ஒருவர் முற்றுகையிடப்பட்டுள்ளார் அவர் யார் அல்-கைடாவில் அவருக்குள்ள பதவி நிலை என்ன என்பது போன்ற விபரங்கள் முதலில் வெளியிடப்படவில்லை ஆனால் முக்கிய நபர் என்று மட்டும் குறிபிடப்பட்டது அமெரிக்க பாசையில் சொன்னால் High value Target.

பின்பு வெளியான உளவுத்துறை தகவல்கள் பலரை புருவம் உயர்த்த வைத்தது அந்த விவசாயகிராமத்தின் பண்ணை வீட்டில் மறைந்திருந்த High value Target—.Alman-Al-Zawagiri அல்-கைடாவின் Number Two.

சுற்றிவழைக்கப்பட்ட விவசாயகிராமத்தின் பெயர் Wanna.இது நம் நாட்டின் நுவரெலியா போன்றதொரு புவியில் நிலை கொண்ட கிராமமாக இருந்தபோதிலும் பிரபலம் அடைந்திருக்கவில்லை.இது ஒரு சாதரண கிராமம்தான் ஆனால் அதன் புவியில் அமைவிடம் அதாவது Geographical Location மிகமுக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த கிராமம் கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரத்தில் உள்ளது இது மட்டுமல்ல இதனை சூழ சுமார் 7000 அடி உயரமான 3 மலைகள் அரண் அமைத்துள்ளன இவற்றை எல்லாம் விடவும் நாம் முன்பு கூறிய Geographical Locationல் மிக முக்கியமானது இந்த கிராமத்தில் இருந்து கூப்பிடு தொலைவில் உள்ளது ஆள் அரவமற்ற ஆப்கான் எல்லை.மறைந்திருக்க வசதியானது எதிரிகளின் நடமாட்டத்தை அவதானிக்க இலகுவானது இதை விடவும் ஏதாவது தலைபோகும். ஆபத்து ஏற்பட்டால் தப்பிச்செல்ல வாய்ப்பானது Wanna.

இப்படி ஒரு அட்டகாசமான Location ஐ தான் பாகிஸ்தான் படைகள் சுற்றுவளைத்துள்ளன ஏன் என்பது தெரியாமலே.சுற்றிவளைப்பு தொடர்பான தகவல் வெளியாகி சில மணி நேரத்தில் இஸ்லாமாபாத்தின் முதல் அறிக்கை வெளியாகின்றது இந்த சுற்றிவளைப்பு நிஜம் தான் என்று ஆனால் எதற்காக இந்த சுற்றி வளைப்பு என்பது அறிவிக்கப்பட வில்லை பாகிஸ்தானிய மக்களுக்கும் சுற்றிவளைத்திருந்த பாகிஸ்தானின் படை சிப்பாய்களுக்கும் இதை தொடர்ந்து சுற்றிவளைப்பில் முக்கிய நபர் ஒருவர் சிக்கி இருக்கலாம் என பாகிஸ்தானிய அதிபர் கூறிவைக்கவும் சுற்றிவளைக்கப்ட்ட நபர் யார் என்ற ஊகம் உலகம் முழுவதும் பரவியது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் காவலனாய் தன்னை அறிவித்து உலகத்தின் மீட்பர் தாமே என்று கூறிக்கொணடிருந்த அமெரிக்காவின் கர்வத்தை விமானங்களால் மோதி வெறும் சீமெந்து கற்களாய் ஆக்கிக்காட்டிய அமெரிக்காவின் வில்லன்கள் மறைந்திருக்கும் ஆப்கானிஸ்தானில் படைகளை இறக்கி அங்கு புல் பூண்டுகளையும் துருவித் துருவி விசாரித்துக்கொண்டிருக்கும் அமெரிக்கா தான் தேடும் நபர்கள் நப்பிசென்றுவிடாமல் இருக்க தரையில் C I.A மூலமும் வானில் Sattelite மூலமும் கண்வைத்திருந்துள்ளது அந்தில் சிக்கியது தான் இப்போது சுற்றிவளைக்கப்பட்டுள்ள High Value Target.

Lan Sat 5 Lan Sat 7 எனும் அமரிக்காவின் புலனாய்வு செய்மதிகள் அனுப்பிய படங்களில் விசித்திரமான அமைப்பும் அசாதாரண நடமாட்டங்கள் இந்த Wanna பகுதியில் இருப்பதை காட்டியிருக்கின்றது.தனக்கு கிடைத்த செய்மதி புகைப்படங்களை கவனமாக ஆராய்ந்த அமெரிக்கா இந்த தகவல்களை பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சின் ஊடாக வழங்கியிருக்கின்றது.இதில் உள்ள முக்கியம் என்னவென்றால் பாகிஸ்தானிய உளவுப்பிரிவை அமெரிக்கா நம்பவில்லை என்பது ஒருபுறமிருக்க இதனை ஒரு உளவுத்தகவல் பரமாற்றமாக்காமல் அதாவது Intelligence Information Interchange ஆக்காமல் ஒரு Diplomatic Move மூலம் பாாகிஸ்தானிய ஆட்சியாளருக்கு ஒரு Check வைத்தது அமெரிக்கா. அமெரிக்காவின் இந்த இராஜதந்திர நகர்வு பாகிஸ்தானை பெரிய சங்கடத்தில் ஆழ்த்த ஒன்றுமே செய்யமுடியாத முஸ்ரப் எடுத்த இராணுவ முன் நகர்வு தான் இந்த சுற்றி வளைப்பு.உண்மையில் இந்த சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த படையினரில் கட்டளை அதிகாரிகளை தவிர ஏனையவர்களுக்கு யாரை சுற்றிவளைத்துள்ளோம் என்பது தெரிந்திருக்கவில்லை காரணம் பாகிஸ்தானிய படைகளில் கணிசமானவர்கள Al-Zawagiri யின் தீவிர ஆதரவாளர்கள்.இதனால் குறிப்பிட்ட இலக்கு யார் என்பது கடைசிவரை பாகிஸ்தானிய படையினருக்கு தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்க Satellite புகைப்படங்களில் சில சுவாரஸ்யமான விடயங்கள் இருந்துள்ளன முதலில் One Meter Over view Image களில் குறிப்பிட்ட பகுதியில் உள்ள கட்டங்களில் நேர்த்தியான வளைந்து செல்லும் பாதை போன்ற ஒரு அமைப்பையும் Building Blocks போன்று ஒன்றுடன் ஒன்று Overlap பண்ணப்பட் உருவங்களையும் பார்க்கலாம் இதைவிட இந்த படங்களை Zoom பண்ணி பார்த்த பொழுது மேலும் பல விசித்திரமான உண்மைகள் தெரிந்தன.

**அவை என்ன இந்த இலக்கை படைகள் கைது செய்ய முடிந்ததா ? இந்த கேள்விகளுக்கான விடைகளுடன் அடுத்த சங்கநாதத்தில் சந்திப்போம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் இந்து சமயப் பாடசாலை ஆசிரியர்கள்

1. திரு. சோதிராஜா மயூரன்
2. திரு. செல்லத்துரை உமாகாந்தன்
3. திரு. ரெங்கன் பரமேஸ்வரன்
4. திரு. மருதை ரவீந்திரன்
5. திரு. வெங்கடாசலம் செட்டியார் சண்முகராஜன்
6. திரு. P. ஸ்ரீஸ்கந்தராஜா
7. திரு. வைத்தி சாந்தகுமார்
8. திரு. கனகலிங்கம் கபில்தேவ்
9. செல்வி. S. நிமேஷிதா
10. செல்வி அகிலா
11. செல்வி மகேஸ்வரி
12. செல்வி S. யமுனா
13. செல்வி கலைவாணி ரகுபதி
14. செல்வி இராஜலக்ஷ்மி முருகையா
15. செல்வி. சிவதர்ஷினி பெரியசாமி
16. செல்வி ஷமந்தி சந்திரசேகரம்
17. செல்வி. துவாரகா யோகேந்திரன்
18. திருமதி. புஸ்பாஞ்சலி இராஜேந்திரன்
19. திருமதி. வாணி தியாகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் இந்து சமயப் பாடசாலை மாணவ மாணவிகளின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

| | |
|---|---|
| திலுக்ஷன் பழனியாண்டி | 5th October |
| மோகன் ஹரிஹரன் | 16th October |
| தேவராஜா பகீரதராஜா | 18th October |
| ஜெகநாதமணி கோஷான் | 20th October |
| ரவீந்திரகுமார் ஆகாஷ் | 27th October |
| யோகேஸ்வரன் நிவாஷன் | 27th October |
| ஆரூரக் குருக்கள் ரிஷிகேசன் | 29th October |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ranjanas
(Pvt) limited

127 Main Street Colombo 11

அதி உன்னதமான ஆடைத் தெரிவுகளுக்கு

Ranjanas




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org